ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக ஆடித்திங்கள் 1934ஸ்ரீ ஜூலைமீ—ஆகஸ்டுமீ	பரல் கஉ

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடு மானைக்கா வண்ணலே.

பதவுரை:—

ஆனைக்கா அண்ணல்—திருவானைக்காவில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலைவனாகிய சிவபெருமான்

திருகுசிந்தையை—உலக நெறியில் முதல்வனை நினையாது மாறுபட்டு உலக நுகர்வுப் பொருள்களை நுகர்தற்பொருட்டு அவைகளையே நினைத்துக் கொண்டிருக்கும் தங்களது உள்ளத்தை

தீர்த்து—அம்மாறுபாட்டினின்றும் முற்றிலும் நீக்கி

செம்மை செய்து—முதல்வனையே நோக்கி நேர்மையாய் நினைக்கும்படி செய்து

ஊறலைப்பருகி—(யோக முறையில் அவ்வாறு நினைத்தலால் திங்கள் மண்டலத்தில் உண்டாகி எழுகின்ற) அமிழ்தத்தை உண்டு

பதம்பற்றி—(அவ்வமிழ்தத்துக்கு முதலாயிருக்கிற முதல்வனுடைய) இரண்டு திருவடிகளையும் (மற்றோர் புகலிடம் இல்லை என்னும் கருத்துடன்) பற்றிக்கொண்டு

அறிந்து—(அத்திருவடிகளைப் பற்றியதனாலுண்டாகும் அருள்ஒளி அறிவினால் உயிர் முதல்வனையின்றி ஒன்றையும் அறியவும் விடயிக்கவும் மாட்டாது என்ற உண்மையை) அறிந்து

உருகி நைபவர்க்கு—(அவ்வாறு அறிகின்ற அருள் அறிவினால் முதல்வன் உயிருக்குக் கட்டு நிலையிலும் வீட்டு நிலையிலும் செய்து வரும் பேருதவியை நன்றி மறவாத அன்பினால் நினைந்து) அகங் குழைந்து உருகி தன் முனைப்புத் தேய்ந்து தேய்ந்து முற்றிலும் கெட்டுச் சிவமாந் தன்மையை உடைய அடியார்களுக்கு

ஊனம் ஒன்றும் இன்றி—மலத்தாலுண்டாகும் குறைவு (முழுவதும் நீக்கி அதனைச்) சிறிதும் இல்லை எனும்படி செய்து மெய்யறிவைக் கொடுத்து (அவர்களை ஆண்டருளி)

அருகு நின்றிடும்—அவர்கள் தன்னுடன் அத்துவிதமாய்க் கலந்து எப்பொழுதும் பேரின்பம் நுகரும்படி செய்து அவர்களோடு உடங்கியைந்து நின்றருளுவன்.

விளக்க உரை

அண்ணல் என்ற சொல் முதற்பொருளாய 'சேர்ந்திருத்தல்' என்று பொருள்பட்டுப் பின் ஆகுபெயராய் உயிர்களோடு எப்பொழுதும் சேர்ந்திருக்கும் முதல்வனைக் குறிக்கிறது. இச்சொல்லினது பொருள் விளக்கத்துக்கு செந்தமிழ்ச் செல்வி சிலம்பு கூ பரல் கூ—நுகக-நுகடு பக்கங்கள் பார்க்க. முதல்வன் உயிர்களுக்குத் தலைவனாய் அவைகளுடன் எப்பொழுதும் சேர்ந்துகொண்டிருந்து அவைகள் தன்னைச் சேர்ந்து பேரின்பம் அடைதற்பொருட்டு வேண்டுவன செய்துகொண்டிருக்கிறவன் என்பது அண்ணல் என்ற சொல்லாற் குறிப்பிடப்பட்டது. ஏ—அசை.

திருகு சிந்தை—வினைத்தொகை. உலக நெறியில் சிந்தையானது ஐந்து வஞ்சப் புலன்கள் வயப்பட்டு முதல்வனை நினையாது மறந்திருத்தல் பற்றி திருகு சிந்தை என்றார். திருகுதல் - மாறுபடுதல். முதல்வனை நேரே நினைந்து வழிபடுதலினின்றும் மாறுபடுதல். "மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்புல னைந்தின் வழியடைத் தமுதே ஊறிநின்றென்னுளெழு பரஞ்சோதி யுள்ளவா காணவந்தருளாய்" என்று மாணிக்கவாசக அடிகள் கோயிற்றிருப்பதிகம் முதலாவது பாட்டில் (388) கூறியிருத்தல் காண்க.

தீர்த்து—தீர்த்தல் என்பது விடுத்தல்; நீங்குதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம் நுகஅ-வது சூத்திரம். தீர்த்தல் என்பது மாறுபாடு முற்றிலும் நீக்குதலை உணர்த்துகின்றது. கடன் தீர்ந்தது என்பது உலக வழக்கில் கடன் முழுவதும் நீங்கியது என்ற பொருளில் வழங்குதல் நோக்குக. தீர்த்து என்றதனால் உலக நெறியை முற்றி

லும் ஒழித்துவிட்டு நெறியிற் செல்லும் 'ஞானத்திற் சரியை' குறிப்பிடப்பட்டது.

செம்மை செய்து—செம்மை என்பது நேர்மை—முதல்வனுடன் நேர்படச் சேர்ந்திருத்தல். முதல்வன் உயிரின் நலங்கருதி பிணக்கின்றி நேர்மையாய் உயிரினைச் சேர்ந்திருத்தல்போல உயிரும் பிணக்கின்றி நேர்மையாய் முதல்வனோடு சேர்ந்திருத்தல். இவ்வாறு உயிர் முதல்வனோடு நேர்பட்டு நிற்பதே இயற்கை; மாறுபட்டு வஞ்சப்புலனோடு சேர்ந்து நிற்பது செயற்கை. "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்" என்றும் "சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்" என்றும் மாணிக்கவாசக அடிகள் திருவாசகத்தில் கூறுதல் நோக்குக. மேலே தீர்த்து என்றது எதிர்மறைச் செயலையும் இங்கே செம்மை செய்து என்பது உடன்பாட்டுச் செயலையும் உணர்த்துகின்றன. செம்மை செய்து என்பதனால் 'ஞானத்திற் கிரியை' கூறப்படுகின்றது.

ஊறலைப் பருகி—ஊறல் என்றது தொழிற்பெயர். இங்கே ஆகுபெயராய்த் திங்கள் மண்டலத்தில் ஊறும் அமிழ்தத்தைக் குறிக்கின்றது. இந்த அமிழ்தமானது யோகி ஒருவர் தமது மூலாதாரத்திலுள்ள குண்டலி அக்கினியைப் பிராண வாயுவினாலெழுப்பி இடைகலை பிங்கலை நாடிகளை அடைத்துச் சுழுமுனை நாடி வழியே செலுத்திப் புருவ நடுவுக்குமேலுள்ள திங்கள் மண்டலத்தை முட்டச் செய்தலால் உண்டாகின்றது என்று யோகநூல்கள் கூறுகின்றன. இந்த அமிழ்தத்தைத் திருமூலர் "யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தபோத அமுதைப் பொசித்தவர்" என்று கூறுகிறார்; 335-வது திருமந்திரம் பாட்டு பார்க்க. இந்த அமிழ்தமானது ஊற்றிலிருந்து நீர் ஊறுதல்போல உண்டாதலால் ஊறல் என்றார். இந்த அமிழ்தத்தை யோகி பருகியபின் அவரது உள்ளம் (சிந்தை) வஞ்சப்புலன்வழி நோக்குதலில்லை. ஊறலைப் பருகி என்பதனால் 'ஞானத்தில் யோகம்' கூறப்பட்டது.

பதம்பற்றி—பதம் - பாதம். முதல்வனுடைய இரண்டு திருவடிகளையும் குறிக்கின்றது. பற்றுதல் - இறுகப் பிடித்தல். "இன்பமே உனைச் சிக்கெனப்பிடித்தேன்" (545) என்று மாணிக்கவாசக அடிகள் கூறுதலை நோக்குக. திருமூலர் 882-வது திருமந்திரப் பாட்டில்,

> "உண்ணீ ரமுத முறு மூறலைத் திறந்
> தெண்ணீர் இணையடித் தாமரைக்கே செல"

என்று கூறியருளினார்.

உருகி நைபவர்க்கு—உருகுதல் என்பது முதல்வன் செய்யும் பேருதவியை நினைந்து அன்பினால் அகங்குழைந்து உருகுதல். உயிர் முதல்வனோடு இரண்டற (அத்துவிதமாய்)க் கலத்தற்கு அன்பினால் உருகிக் குழைதல் இன்றியமையாததாகும்.

நைதல்—தேய்தல், குறைதல், இங்கே அது ஆன்மபோதம் (தன் முனைப்பு) தேய்ந்து தேய்ந்து முற்றிலும் நீங்கி முழுவதும் சிவமாந்தன்மையை அடைதலைக் குறிக்கின்றது. "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்ற திருத்தாண்டகப் பாட்டில் நைதல் இப்பொருள்படுதல் அறிக.

திருகுசிந்தையைத் தீர்த்தலும், அதனைச் செம்மை செய்தலும், ஊறலைப் பருகலும், உருகி நைதலும் ஒன்றன்பின் ஒன்று ஏதுவும் பயனுமாய் உயிரின்கண் நிகழும் செயல்களாம்.

ஊனம் ஒன்று இன்றி—ஊனம் - குறைவு. உயிருக்கு மலத்தாலுண்டாகும் குறைவு. ஒன்றும் இன்றி - சிறிதும் இன்றாகச் செய்து. மலமுழுவதும் நீங்கினாலொழிய முழு வியாபக அத்துவிதக் கலப்புப் பேரின்பம் அடைய முடியாதாதலின் ஊனம் ஒன்றின்றி என்றார். ஒன்றும் என்பதிலுள்ள உம் விகாரத்தாற் றொக்கது. 'ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆண்டவன்' என்று அடிகள் கோயில் திருவிருத்தம் 6-வது பாட்டிற் (80-6) கூறியருளினர்.

அருகு நின்றிடும்—அருகு-பக்கல். அது இங்கே உடனாய அல்லது உடங்கியைந்த என்ற பொருளில் வந்தது. நின்றிடும்—நிலையாக நின்றருள்வன். அதாவது கலந்தபின் பிரிவதில்லை என்பது கூறப்பட்டது. "அப்பணைந்த வுப்பி னுள மணைந்து சேடமாங் கப்பின்று மீசன் கழல்" என்று சிவஞானபோதம் 11-வது சூத்திர வெண்பாக் கூறுதல் காண்க.

அருகு நின்றிடும் என்பதனால் உயிரும் சிவமும் கலப்புத் தன்மையால் ஒன்றாயினும் பொருட்டன்மையால் வேறு என்பது குறிப்பிடப்பட்டது. ஊனமொன்றின்றியே அருகுநின்றிடும் என்பதனால் துரியாதீத நிலையின் கண்ணுள்ளதாகிய ஞானத்தில் ஞானம் கூறப்பட்டது. இப்பாட்டில் திருகு சிந்தையைத் தீர்த்து என்பது சென்ற திங்கள் வெளியீட்டில் வந்த "மெய்யராகி" என்ற திருஞான சம்பந்த அடிகளுடைய தேவாரப் பாட்டில் 'பொய்மை நீக்கி' என்பதனோடும், 'செம்மை செய்து' என்பது 'மெய்யராகி' என்பதனோடும், 'பருகி ஊறலை' என்பது 'வேதனையைத் துறந்து' என்பதனோடும், 'உருகி நைபவர்க்கு உள்ளமொன்றின்றியே அருகு நின்றிடும்' என்பது "செய்யரானார் சிந்தையான்" என்பதனோடும் கருத்தில் ஒத்திருத்தல் கண்டு கொள்க.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(மூன் இரா அ-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகளை, நாணின் நீக்கு தற்பொருட்டு, இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள் மாட்டு நிகழ்த் தப்படுமொற்றூற் கூடிய தனது அன்புதோன்ற நலம் பாராட்டியது.

இறையனார் பாடியது

2. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

பதவுரை:— கொங்குதேர் வாழ்க்கை—பூந்தாதை ஆராய் கின்ற வாழ்க்கையினையும்; அம் சிறை—அழகிய இறகினையு முடைய; தும்பி—வண்டே! காமம் செப்பாது—விரும்பியபடி இச்சகம் பேசாது; கண்டது மொழிமோ— உண்மையாகக் கண் டறிந்ததைச் சொல்; பயிலியது கெழீஇய நட்பின்—நெருங்கு தல் பொருந்திய நட்பினையும்; மயில் இயல்—மயிலைப் போன்ற சாயலையும்; செறிஎயிறு—நெருங்கிய பற்களையு முடைய; அரிவை கூந்தலின்—இந்தப் பெண்ணினது கூந்தலைக் காட்டிலும்; நீ அறியும் பூ—நீ அறியும் பூக்களுள்; நறியவும் உளவோ--மண முள்ளனவும் உள்ளனவோ?

கொங்கு — பூந்தாது, தேன். தேர்வாழ்க்கை—வினைத் தொகை. சிறைத்தும்பி—இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன் தொக்க தொகை. தும்பி—அண்மைவிளி. மொழிமோ

—இதில் 'மோ' முன்னிலை அசை. செறீஇய—செறுவிய. எயிறு முன்தோன்றி விழுந்து பின் முளைக்கும் பல். செறி எயிறு—வினைத்தொகை. அரிவை—காலவாகுபெயர். அரிவை, எழுவகைப் பருவப் பெண்களில் பத்தொன்பதிற்குமேல் இருபத்தாறு வயதிற்கு உட்பட்ட பெண். கூந்தலின்—இன்—ஐந்தாம்வேற்றுமை யுருபு; எல்லைப் பொருளது; உவமைப் பொருளது என்றும் கூறலாம். பூவே—பூக்களுள் என ஏழன் உருபுவிரிக்க. தும்பி—கருநிற முள்ள வண்டு. பயிலியது—தொழிற்பெயர். செறீஇய—மிக்க; உயிரளபெடை.

இதனால் தலைவிகூந்தலின் மணம், பூக்கள் எவற்றினும் விஞ்சிய இயற்கை மணம் உடையது என வியந்து நலம் பாராட்டியதாம்.

காமம் செப்பல்—விரும்புதற்குக் காரணமான சொற்களைச் சொல்லல்.

மேற்கோள் விளக்கம்

1. "கொங்குதேர்......பூவே"—தன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து நயப்புணர்த்திற்றாயிற்று என்பது போந்த பொருள். —(இறையனாரகப் பொருள்—பக். 54)

2. இயற்சீரும் உரிச்சீரும் ஆசிரியத்துள் விரவிவந்தன. (உ-ம்) "கொங்குதேர்......பூவே" (யாப்பு—காரிகை—பக். 71)

3. "காமம் செப்பாது"—"காமம் புகலாது"—(நாலடியார்-42)
"காமம் செப்பி" —(பெருங்கதை—1-41-101)

4. கண்டது மொழிமோ"—என்பது 'மோ' என்னும் இடைச் சொல். --(நேமிநாதம்—பக். 92)

5. "காமம் செப்பாது கண்டது மொழிமோ"—
"வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்
தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்"—(சீவகசிந்தாமணி-888)
"காசில் காமம் செப்பிக் கண்ணினால் இரப்பர்" (ஷை 2549)

6. "காமம் செப்பாது கண்டது மொழிமோ"—முன்னிலை அசைச்சொற்களுக்கு உதாரணம்—நன்னூல்—சங்கரநமச்சிவாயப் புலவர்—பக்கம் 243; நன்; மயிலைநாதர், பக்கம் 298; தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணம் பக்கம் 269; சேனாவரையம்; 274 சூ; தெய்வச்சிலையார்; 269 சூ: உரை. ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்பதற்கு உதாரணம்.
(நன்னூல்—சங்காரநம—பக். 250) (நன்—மயிலைநாதர்—பக். 309.)

7. காமம்செப்பாது கண்டது மொழிமோ'—என்றது 'என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாதே சொல்' என்றலிற் குறிஞ்சி நிலம் ஒன்றாயிற்று.
—(தொல்—பொருள்—களவு—பக்கம் 356. நச்சினார்க்கினியம்.)

8. "அப்பாலோர் வண்டை யனுப்பின் அவர் காமம் செப்பாதே என்றூற் றிகைக்குமே"— (தமிழ் விடுதூது கண்ணி 108).

9. "அம்சிறைத்தும்பி"—

"மாஅ லஞ்சிறை மணிநிறத் தும்பி" —(குறிஞ்சிக்கலி-10-2)

"மணிச் சிறைத்தும்பி"— (குறுந்தொகை-392)

"கொங்குதேர் வாழ்க்கைத் தும்பி" —(ஐங்குறுநூறு-20)

"மலர் தொறும் சிறுதேன் நக்கித் திரிவண்டு"

—(திருவிளையாடல்படலம் 52—செய்யுள் 69).

'அகமுனர்ச் செவிகை வரின் இடையன கெடும்' என்பதற்கு மேற்கோள்— (நன்னூல்—சங்கர நம—பக்கம் 100).

"காந்த ளூதிய மணிநிறத் தும்பி"— (நற்றிணை-17)

"காந்த, ணறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி"—

(ஐங்குறுநூறு-239)

"காந்த, ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி"—(அகநானூறு-108)

"அறுசில் கால வம் சிறைத் தும்பி"— (ஐங்குறுநூறு-20)

10. அரிவை கூந்தலின் நறியவும் உளவோ"—

"மண நாறு கதுப்பினுய்" —குறிஞ்சிக்கலி 73.

11. "கொங்குதேர் வாழ்க்கை" என்பதும் இளவேனிலாயிற்று; தும்பி கொங்கு தேரும் காலம் அது வாகலின்"—தொல்காப்பியம், அகத்திணையியல், பக் 51. நச்சினர்க்கினியர் உரை)

12. "கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி!" என்று விளித்தது, "நறியவு முளவோ நீ யறியும் பூவே" என்று வினதற்குத் தகுதியுடைமை தோன்ற என்க.

13. "கொங்குதேர் வாழ்க்கை.........பூவே"—பிரிதல் நிமித்தம். இதனுள், 'தும்பி' என்றது முன்னிலை யாக்கல்; 'கண்டது மொழிமோ' என்றது சொல்வழிப் படுத்தல்; 'கூந்தலின் நறியவு முளவோ' என்றது நன்னய முரைத்தல்; "காமஞ் செப்பாது" என்றது என்நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாது மெய் கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித் தென்றது; 'பயிலியது நட்பு' என்றது தன் நிலை யுரைத்தல்"—(தொல்காப்பியம், களவியல், சூத்திரம் 101' நச்சினர்க்கினியர் உரை; பக்கம் 371)

14. 'இச் செய்யுள் உவகைபற்றிக் கூறியது'

—(தொல்—பொருளியல்—பக்கம் 781)

15. "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள்.

—(தொல்—செய்யுளியல்—பக்கம் 490)

16. இச் செய்யுளைப் 'பெருநயப் புரைத்தல்' என்பதற்கு உதாரணம் காட்டுவர். —(நம்பியகப் பொருள்—சங்கப்பதிப்பு)

17. "நீயறியும் பூவே"—எழன் உருபு இறுதிக்கண் தொக்கது.

"ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள் வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான"—என்பது விதியாகலின்.
—(தோல்—சோல்—வேற்றுமை மயங்கியல் 22)

18. மதுரைச் சோமசுந்தரக் கடவுள் இப் பாசுரத்தைத் தருமி என்னும் அந்தணனுக்கு இயற்றித் தந்தருளினர்.
—(பரஞ்சோதி முனிவர்—திருவிளையாடல் 88).

திருவாலவாயுடையார் திருவிளையாடலில், கிழியறுத்த திருவிளையாடலில்,

வழுத்திய மறையோன் தன்மை
கண்டவன் மனத்தி லாசை
ஒழித்திடு வான்வி ரும்பி
யுரகமா ணிக்கச் செம்பொன்
குழக்கியை நாதன் அங்கண்
'கோங்குதேர் வாழ்க்கை' என்றோர்
கிழிக்கிசை கவிதை பாடிக்
கொடுத்தனன் கீர்த்தி வேட்டு"—என்று கூறுவதால் அறிக

"தருமிக்கே,
ஓர் வாழ்க்கை வேண்டி யுயர்கிழிகொள்வான் 'கோங்கு தேர் வாழ்க்கை' என்றெடுத்த செய்தியும்' '—(தமிழ்விடு தூது 115)

19. "மதுரையில் சண்பகமாறன் என்னும் வங்கிய சூடாமணி மாறன் தன் மனைவி கூந்தலிடமாகப் போந்த மணத்தைக் கருத்திற் கொண்டு, தன் உள்ளக் கிடக்கையை அறிந்து பாடுவார்க்கு ஒரு பொற்கிழி யளிப்பதாகச் சங்க மண்டபத்தில் தூக்கினன். அக்காலே அவ் ஊரிலிருந்த அந்தணனாகிய தருமிக்கு இறைவன் இப்பாசுரத்தைப் பாடிக் கொடுக்க; இதில் நக்கீரர் பொருட் குற்றமுண்டு என வாதிட்ட போது தாமே புலவராய்ச் சென்று வென்று பொற்கிழியைத் தருமிக்கு அளித்தார்"—என்பது புராணவரலாறு.

மெய்ப்பாடு:—புணர்ச்சிபற்றிய வுவகை. என்னை?

"செல்வம் புலனே புணர்வு விளையாட் டென்றல்ல னீத்த வுவகை நான்கே"—(தோல்-பொருள்—மெய்ப்பாட்டியல்-11)

என்பாராகலின்.

பயன்—நயப்பு அறிவித்தல்

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(முன் ௬கக-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்சார்புக் கூட்டு நிலைமை (The Ego-Complex)

முப்பெருங் கூட்டு நிலைமைகளுள் தலையாயது தற்சார்புக் கூட்டு நிலைமையே யாகும். இதன் தோற்றமும் மானிடப் பிறவி யின் தோற்றமும் ஒரு காலத்தன. இதன் முதற்றோற்றம் தன் னுணர்ச்சி எனப்படும்; ஆங்கிலத்தில் ஸேல்ப் கான்ஷஸ்நேஸ் (Self - Consciousness) எனப்படும். இக்கூட்டு நிலைமையின் முதலுறுப்புக்கள் புலனறிவுகளே. மற்ற உறுப்புக்களாவன, எண்ணங்கள், மெய்ப்பாடுகள், பழக்கங்கள் என்பன. இத் தற்சார்புக் கூட்டு நிலைமையைத் தூய்மைப் படுத்தும் வழி சிந்தித்தல் என்பது. இதனை ஆங்கிலத்தில் ஸேல்ப் இன்ட் ராஸ்பேக்ஷன் (Self-introspection) என்பர். இதுவே, கேட் டல், சிந்தித்தல், தெளிதல், அணைதல் என்னும் நாற்பால் முத்தி நெறியுள் கூறப்பட்ட சிந்தித்தலாம். தற்சார்புக் கூட்டு நிலைமை யில் எண்ண முயற்சிகள் (Conations) சிலவுள. அவைகளுள் மிக்க வன்மை யுடையன இரண்டு. அவை வாழ்வெண்ண முயற்சி, ஆற்றலெண்ண முயற்சி என்பன. ஆங்கிலத்தில் அவை வில் டு லிவ் (Will to Live) வில் டு பவர் (Will to Power) எனப்படுவன. எண்ண முயற்சியாவது எண்ணத்தால் முயறல்.

> எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்

என்னும் வள்ளுவர் வாய்மொழி ஈண்டு உன்னற்பாலது. இனி, வாழ்வெண்ண முயற்சி என்பது நீடுவாழ எண்ணத்தால் முயறல் எனும் பொருட்டு; ஆற்றலெண்ண முயற்சி என்பது ஆற்றல் அடைய எண்ணத்தால் முயறல் எனும் பொருட்டு. மேலும் சில எண்ண முயற்சிகள் உள. அவை அறிவெண்ண முயற்சி, தொழி லெண்ண முயற்சி முதலியன. ஆங்கிலத்தில் மேற்கூறப்பட்ட இரண்டும் வில் டு நோ (Will to Know) என்றும் வில் டு டு (Will to Do) என்றும் கூறப்படுகின்றன. தூய எண்ண முயற்சிகளால் உளத்தைச் செம்மைப் படுத்த இயலும்.

தற்சார்புக் கூட்டு நிலைமை குழவிப் பருவம் முதற்கொண்டு முதுமைப் பருவம் வரை முதிர்ச்சியும் விரிவும் பெறுகின்றது. வாழ்க்கையில் யாதொரு இடுக்கணும் நேராமலிருந்தால் இக் கூட்டு நிலைமை ஒரு திண்மையை அடைகின்றது. இடுக்கண்கள் நிறைந்த வாழ்க்கை பெற்றவனுடைய தற்சார்புக் கூட்டு நிலைமை ஆக்கமழிந்து சிதறிவிடுகின்றது. அறத்தாற்றின் நிற்பானுடைய தற்சார்புக் கூட்டு நிலைமை தூய்மையிற் பெருகி, வன்மையில் ஓங்கி விளங்கும்.

தற்சார்புக் கூட்டு நிலைமையின் சிறந்த உறுப்புக்கள் தன்னுறுதி, தன்னிழிவு என்னும் உட்பாடுகளும், இறும்பூது, சிறுமை என்னும் மெய்ப்பாடுகளுமே என்று முன்னர்க் கூறினோம். ஸுபீரியாரிடி காம்ப்ளேக்ஸ் (Superiority Complex) என்னும் மீக்கோளும் தன்னுணர்ச்சிக்கும், இன்ஃபீரியாரிடி காம்ப்ளேக்ஸ் (Inferiority Complex) என்னும் குன்றக்கோளும் தன்னுணர்ச்சிக்கும் முறையே சார்பாக உள்ளவை தன்னுறுதி, தன்னிழிவு என்னும் உட்பாடுகளே. தன்னைத்தானே பிறரினும் மேலாகக் கருதும் உணர்ச்சியே மீக்கோளும் தன்னுணர்ச்சி எனப்படும். தன்னைத்தானே பிறரினும் கீழாகக் கருதும் உணர்ச்சியே குன்றக்கோளும் தன்னுணர்ச்சி எனப்படும். இவ்விரண்டும், தற்சார்புக் கூட்டு நிலைமையும் இனச்சார்புக் கூட்டு நிலைமையும் கலப்ப, எழுந்தனவாம்.

இனச்சார்புக் கூட்டு நிலைமை

(The Herd - Complex)

மனிதன் யாண்டும் இனச்சார்பு விழைவினை யுடையவனாவான். ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இனச்சார்பு விழைவு என்னும் உட்பாடு உண்டு. இனத்தின்கண் எழுகின்ற உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும் மனிதனுடைய உள்ளத்தில் அவனை அறியாமலே பதிகின்றன. இப்பதிவு நேர்வதற்குக் காரணம் மனிதனுடைய உள்ளத்தில் இனச்சார்பின் உட்பாடுகள் உள்ளமையே. இனச்சார்பு விழைவு (Gregariousness) என்பது மனிதன் தானே மேற்கொண்ட பழக்கங்களில் ஒன்றன்று: அவனுடைய உளப்பான்மையை ஆளும் கருவிகளில் ஒன்றாம்.

தேனீக் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு தேனீயும் தனித்தியங்க மாட்டாது. ஓநாய்க் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஓநாயும் தனித்தியங்க மாட்டாது. இனச் சார்பினுட்பாடு இக் கூட்டங்களை வன்மையுடன் பிணிக்கின்றது. ஆறறிவுடைய மக்களினத்தில் இவ்வினச் சார்பினுட்பாடு பரவி இருக்கின்றதேயொழிய மிக வன்மையுடன் பிணிப்பதில்லை. மனிதன், இன

நலத்திற்கு ஏற்ற முறையில் தன் தொழிற்பாடுகளை அமைத்துக் கொள்ளும் திறனுடைய வனாதலின், அவன் தேனீப் போலவும் ஓநாய் போலவும் வலிய இனச் சார்பினுட்பாட்டுக்கு உட்படுவ தில்லை. மக்களினத்தில் இனச்சார்பினுட்பாடு கோள்கைத் துறையில் (Realm of Ideas) மேம்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இனத்தாரிடையும் காணக் கிடக்கின்ற மூடநம்பிக்கைகள் (Non - rational Beliefs) இனச் சார்பினுட்பாட்டால் எழுந்தனவே. ஒவ்வொரு மனிதனும் பின்பற்றும் ஒழுக்க நெறியும் (Moral Laws) இனச்சார்பி னுட்பாட்டின் விளக்கமும் பயனுமாம். ஒழுக்க உணர்ச்சி (Moral Sense) என்று சொல்லப் படுவதும் மனிதன் தன் இனத்துடன் நல்முறையில் இயைபு பட்டிருத்தற்கு அமைந்த இனச்சார்பி னுட்பாட்டின் நுணுக்கமே. ஒழுக்க நெறியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒழுகல் என்பது, தனிமனிதன் தன் இனத்தினால் பெற்ற இனச்சார்பி னுட்பாட்டின் ஆற்றலுக்கு அடங்கி நடப்பதாம்.

ஒழுக்கநெறியின்பாற்பட்டொழுகல் தற்சார்புக் கூட்டு நிலைமையிற் பாற்பட்ட தன்றோ? எனின், அன்று, தற்சார்புக் கூட்டு நிலைமை இனச் சார்புக் கூட்டு நிலைமையால் பலவகை மாற்றமடையும். அவ்வாறு மாற்றமடைந்தவைகளில் ஒன்றே ஒழுக்க நெறியின் பாற்பட் டொழுகல் என்பது. எனவே அது இனச்சார்புக்கூட்டு நிலைமையின்பாற்படும். (The ego - complex is largely modified by the herd complex, and the ethical self could not exist without the herd; but the ego - complex, as such, pre - existed and is always a perfectly distinct thing).

வழக்கு (Convention) என்று சொல்லப்படுவதும் இனச் சார்புக் கூட்டுநிலைமையின் பயன்களிலொன்றாம். என்னெனில் இனம் தனிமனிதனுடைய செய்கைகளை ஆளுதலே வழக்கு எனப்படுவது. அவைமுறை (Etiquette) என்பதும் இன நலங்கருதி தனிமகன் மேற்கொள வேண்டிய முறைகளில் ஒன்றாம்.

இனப்பழக்கம் (Gregarious Habit) மனிதனுக்கு இடைக் காலத்தில் நேர்ந்த தொன்று. முதலில், மனிதன் தனியனாக குகைகளில் வாழ்ந்து வந்தான். பின்னர் வெளி வாழ்க்கை (Life of the plains) மேற்கொண்ட பொழுது இனப் பழக்கத்தைக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இனி இனத்தினுடைய உளச் சார்புப் பயனையும் (Psychical effect of the Herd), கூட்டத்தினுடைய உளச்சார்புப்பயனையும் (Psychical effect of the Crowd) பிரித்தறிய வேண்டும். இனச்சார்புப் பயன் நிலையுள்ளது; கூட்டச் சார்புப்பயன் சமயம்

நேரும் பொழுது தோன்றுவது. தூக்கிப் பிடித்த கள்வனைப் புடைக்கும் போது கூட்டச் சார்புப்பயன் தோன்று கின்றது. மெய்ப்பாடுகளைத் தூண்டும் சொற் பொழிவைக் கேட்கும் பொழுது கூட்டச் சார்புப்பயன் தோன்று கின்றது. இன உளச் சார்புப்பயன் என்றும் நிலைத்திருந்து மனிதனுடைய உள வாழ்க்கையை நடாத்துவது.

இனச் சார்புக் கூட்டு நிலைமை பல வகைப்படும். எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் தன் உறவினரிடை ஒரு இனச் சார்புக் கூட்டு நிலைமையையும், தன் தோழ ஊழியரிடை ஒரு இனச்சார் புக் கூட்டு நிலைமையையும், தனக்கேற்புடைய அரசியற் கொள்கை யரிடை ஒரு இனச் சார்புக் கூட்டு நிலைமையையும், தனக்கேற் புடைய பெருநெறிக் (Religion) கொள்கையரிடை ஒரு இனச் சார்புக் கூட்டு நிலைமையையும் பெற்றிருப்பான். ஒரு நாட்டு மக்களிடை காணப்படுகின்ற, செல்வர், நடுவகுப்பார், ஏழைக் குழுவினர் (Aristocrats, Bourgeouis, Proletariat) என்று கூறப்படுகின்ற ஒவ்வொரு கூட்டத்தாரிடையும் ஒவ்வொரு இனச் சார்புக் கூட்டு நிலைமையுண்டு. இதனை வகுப்பு உணர்ச்சி (Class Consciousness) என்பர்.

இனச் சார்புக் கூட்டு நிலைமையின் மேல் நிலை, உலகம் முழு வதையும் தன்னுள் கொண்ட இனத்தின் பாற்பட்டதாகும். இவ் வினத்தை ஆங்கிலத்தில் வோர்ல்ட் ஹேர்ட் ("World Herd") என்பர். இந்நிலை எளிதிற் கைகூடுவதன்று: சில பேரறிவாளரின் உளங்களில் கொள்கை யளவாக இந்நிலை நிற்கின்றதே யொழிய செயற்கை முறையில் இன்னும் அமையவில்லை. எனினும், நாள டைவில் செயற்கை முறையிலும் ஏற்படும் என்பது திண்ணம்.

(தொடரும்)

பொருணூல் (Economics)

[திரு. B. நடராஜ பிள்ளை, B. A., (Hons.)]

(முன் ௪௨௨-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தின் அவசியம் மிகுதல்

அதே காலத்தில் பண்டமாற்றல் நிலையிலிருந்து நாணய மாற்றல் நிலைக்கு நம் நாடு நெகிழ்ந்ததாலும், நாட்டிலே வாணிப முயற்சிகள் சற்று விரிந்ததாலும் பணத்தின் தேவையும் மிகுந் தது. பணம் வழங்கும் பணிகள் மிக மிக, பணத்தின் தேவையும் மிகும். அதன் உபயோகம் விரிய, அதன் அவசியமும் அதிகரிக் கும். நாணயமாற்றல் முறைவிரிய, கொடுக்கல் வாங்கல்கள் பல்க, பண்டங்களின் விலைகளும் மாற்றமடைந்தே தீரும். ஆங்கில அரசு இந்தியாவில் நிறுவியதோடு, நிலவரி செலுத்துவதும், அர

சாங்க வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுப்பதும் ரொக்க மாகவே யென்று விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் வரு வதற்கு முன்னர் நிலவரியானது சிற்சில வகையறுக்களில் பண மாகவும் பெரும்பான்மை தானிய வகைகளாகவும் வசூலிக்கப் பட்டு வந்தது. கீழ இந்திய வர்த்தகக் கம்பெனியார் வரிகளைக் கண்டிப்பாக ரொக்கமாகவே பிரிப்பதென்று பறைசாற்றினர். இது வரி செலுத்தும் மக்களுக்குச் சில அசௌகரியங்களை உண்டுபண்ணிற்று. இத்தகைய ஒரு புது முறையை ஏற்படுத்தக் காலமோ ஏற்றதா யிருக்கவில்லை. தஞ்சாவூர் ஜில்லாவிலே 1804-7-ல் ஆட்சியி லிருந்த அமானித் திட்ட காலத்தில் பண வரியானது வழக்கத்திற் கொணரப்பட்டது. 1807-10 வரையி லிருந்த மூவாண்டு வார காலத்தில் இந்தப் புது முறைக்கு ஊக்க மளிக்கப்பட்டது. முடிவில் பின்னே வந்த 'ஒழுங்கு'த் திட்ட காலத்தில் இறுதியாக நிறுவப்பட்டுவிட்டது. ஆதியில் குடியான வர்களைப் பலவந்தமாக அரசாங்கத்தார் பண வரியை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளவில்லை. எனினும் பண வரியைப் பெரும்பாலாக பரப்புவதற்கு வேண்டிய ஊக்கங்கள் பற்பல முறை களில் அளிக்கப்பட்டன. தீர்வை முறையினை ஆட்சியிற் கொணரும் நோக்கத்தோடு தொன்றுதொட்டு தங்கள் உரிமை யெனக் கொண்டிருந்த மிராசுதார்களின் கிராம வரித் திட்டத் துக்கு மீண்டும் புத்துயிர் அளித்து அவர்களைத் திருப்தி பண்ணு வதாக 1808-10-ல் முடிவு கட்டப்பட்டது. மிராசுதார்களின் கீழ்க் குடியானவர்கள் வாரத்தினை நெல்லாகச் செலுத்தி வந்த பழக்கத்தை யொழித்துப் பணக் குத்தகை முறையைப் பரவச் செய்யப் பலவித சட்டங்களும் அரசாங்கத்தாரால் இடப்பட் டன. நாளடைவில் மெல்ல மெல்ல ஜில்லா முழுதும் பணத் தீர்வைக்கு ஒத்து வந்துவிட்டது. இம்மாதிரியான கஷ்டங்கள், இந்தத் தானிய வார முறையிலிருந்து பணத் தீர்வையாக மாறிய காலத்து, மற்ற ஜில்லாக்களிலும் மிகுதியாக உண்டாயின.

இம்மாதிரி தானியங் கொண்டு நடத்தி வந்த கொடுக்கல் வாங்கல்களுக்குத் திடீரென்று நாணயத்தை விரும்பினல், அந் தத் தேவைக்குத் தகுந்தவாறு நாணயங்களின் அளவும் விரிந்தில தேல், அத்தகையதொரு மாற்றம் துன்பம் தராததா யிராது. ஆனல் நாம் முன் கூறியபடி யுள்ள சற்றும் நெகிழ்ச்சி யில்லா ஒரு நாணய ஏற்பாட்டில், சுருங்குவதன்றி விரிவதறியா ஒரு திட்டத்தில், விலைகள் விழுந்தே தீரும்.

முகலாய மன்னர் காலத்தில், படைச் சேவகர்கட்கும், அர சியல் வேலையாட்களுக்கும் முக்கியமாக தானியத்திலேயே சம் பளம் கொடுக்கப்பட்டது. ஊதியத்திற்குப் பதிலாக நிலங்களும் மானியங்களும் அவர்களுக்குக் கொடுப்பது பெரு வழக்காக

இருந்தது. ஆங்கில அரசாங்கம் வந்ததும் முதன்முதல் அவர்கள் செய்தது என்னவென்றால், சுதேசச் சிற்றரசர்களைச் சார்ந்த படைகட்குப் பதிலாக நன்றாகப் போர் முறையில் பழக்கப்பட்ட வீரர்களை ஏற்படுத்தியதாகும். முன்னர் சுதேசப் படையாட்களுக்கு அரசாங்கக் கஜானாவிலிருந்து கொடுக்கப்பட்ட பண ஊதியம் மிக அற்பமே. வேறு மாமூல் வழிகளிலும், மானிய வழிகளிலும் அவர்கள் பல ஊதியம் மறைவாகப் பெற்று வந்தனர். இவை பெரும்பாலும் தானியமாகவே இருந்து வந்தன. ஆனால் ஆங்கில அரசாங்கம் வந்ததும் இவர்களுக்கு இம் மாதிரி மானியங்களை நிறுத்திப் பதிலாக பணச் சம்பளம் கொடுக்கத் தலைப்பட்டனர்.

இங்ஙனம் நாணயமாற்றல் முறை விரிந்ததாயின், அது விலைகள் குன்றுவதற்கு எத்துணைப் பொறுப்பாக இருந்தது? இதனைப்பற்றிப் பற்பல கருத்துக்களிருப்பது இயல்பே. பாம்பே குவார்ட்டர்லி ஜர்னல் என்ற தாளில் 1857-ல் எழுதிய ஒரு கட்டுரைகாரர் "இந்த நெருக்கடி முழுதும், நாம் தீர்வையினை நாணயமாக வசூலிக்கவே நாணயத்துக்கு அளவில்லாத பிரியம் ஏற்பட்டதாலும், அந்த நாணயங்களை விவசாய ஜில்லாக்களிலிருந்து படைகள் நிறுத்தப்பட்ட இடங்களுக்கு எடுத்துப் போயதாலுந்தான் விளைந்ததென்று கருதினர். இது ஒன்றை ஒன்பதாகக் கூறுவதாகும். நாணயமாற்றல் பெருவழக்காக வந்ததன் பயனாய்ப் பற்பல இடுக்கண்கள் விளைந்தன வென்பது மெய்யே. ஆனால் அரசாங்கத்தார் வரியாக வசூலித்த நாணயங்களில் ஓரளவேனும் மீண்டும் மக்கள் கையில் பலவாறாகப் புகுந்தே இருத்தல் வேண்டும். இந்தப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இது ஒன்றே தனிக் காரணமெனக் கூறுவது உண்மைக்கு ஊறு செய்வதாகும்.

பணத்தின் தேவையானது பண்டங்களின் மிகுதியாலும் குறைவாலும், அவைகளைக் கொண்டுள்ள கொடுக்கல் வாங்கல்களாலும் பாதிக்கப்படுகின்றது. அதாவது, பண்டங்கள் முன்னிலும் மிகுதியாக உற்பத்தி செய்யப்படினும், வியாபார முயற்சிகள் பலமாய் விரியினும், நாணயத்தின் அவசியம் அதிகரிக்கும். அப்பொழுது தக்கபடி நாணயமில்லாக்கால், அந்நாணயங்கள் முன்னிலும் விரைவாகப் புழங்காக்கால், பண்டங்களின் விலை அதனாலேயே வீழும். ஆகவே இந்த நிகழ்ச்சிகள் எவ்வளவில் பணத்தின் தேவையினைப் பாதித்த தென ஆராய்தல் வேண்டும்.

முற்கூறிய பெடர் என்பவர் இந்த நிகழ்ச்சிகளால் பணத்தின் தேவை முக்கியமாக அதிகரித்தது என்று கருதினர். 'பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்டதன் பின்னர், வியாபாரம் வளர்ந்

ததால் நாணயம் செய்யவேண்டும் பணி முன்னிலும் மிகுந்தது. ..... சமாதானமும், நிலைத்த ஆட்சியும் நிலவ, விவசாயம் விரிந்து பண்டங்களின் விளைவு மிகுந்தது' என்று கூறுகின்றார். முதன் முதல் இரயத்துவாரி வரித் திட்டத்தை அமைத்த சீரைப் பார்க்குமிடத்து அதனால் எள்ளளவும் விளைவு அதிகரித்திராது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுவ தொன்றாகும். ஆதித் தீர்வைகள் மிகப் பளுவாய்ச் சுமத்தப்பட்டன. பிறகு விலைவாசியும் இறங்கிவிடவே, விவசாயம் இலாபமற்றதாய்ப் போக, அனேகர் தம் நிலங்களையே விட்டுவிட்டுப் போய் விட்டனர். கடப்பா ஜில்லா கலெக்டரா யிருந்த மெல்லர் என்பவர் 1845-ல்: "குடியானவர்களின் முறையீடும் வேண்டு கோளும் என்ன வெனில், அவர்களுக் குரிய நிலத்தின் அள வைக் குறைத்துக் கொடுக்க வேண்டு மென்ப தாகும். விவசாயம் இலாபகரமானதன்று என்பதற்கு இதைவிட வேறு தெளிவும் வேண்டுமோ? நிலத்துக்கு விலையே இல்லை. முன்பு, கைப்பணத்தி லிருந்து தீர்வையைச் செலுத்திவிட்டு, பிறகு விலை வாசி ஏறின காலத்தில் விளைவை விற்கக்கூடிய நிலையிருந்த தக்க குடியானவர்களெல்லோரும் இப்பொழுது உயர்ந்த வட்டிக்குக் கடன்பட்டு, மூழ்கி, கடன் வழங்கியவரின் கருணையால் உயிர் வாழ்கின்றனர். கலக்டெருடையவும், சிப்பந்திகளுடையவும் பெருமுயற்சி மட்டும் இல்லையெனில், அதிகத் தீர்வை கொண்ட நிலங்களில் பாதியும், அல்லது மூன்றிலொரு பங்காவது இதற் குள் குடியானவர்களால் கைவிடப்பட்டிருக்கும்'' என்று வரைந் தார். பயிர்த்தொழில் எத்துணைப் பயனற்றதா யிருந்ததென் பதைச் சென்னைக் கவர்னராக இருந்த ஹாரிஸ் பிரபு என்பவர் 1856-ல் சென்னை மாகாணத்திலே மொத்த நிலத்தில் சாகுபடி செய்யப்படும் நிலத்தினளவு ஐந்திலொரு பங்கே என்று எழுதிய வாக்கியம் வலியுறுத்தும். 1825-26-ம் ஆண்டில் நிலவரியின் தொகை 330 இலட்சம் ஆக இருந்தது. ஆனால் 1829-30-ல் 284 இலட்சமாகக் குறைந்தது; 1833-ல் 275 இலட்சமுமாகிற்று. இவ்வளவு குறைவடைந்த செய்தி கம்பெனியின் இங்கிலாந்தியத் தலைவர்கள் மனத்தில் கவலையைக் கிளப்பவே, அவர்களின் ஆணை யால் சென்னையில் வரி வருமானம் குறைவதற்குரிய காரணங் களை ஆராய ஒரு விசாரணை நடத்தப்பட்டது. ஆண்டாண்டு தோறும் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டுவந்த வரிக் குறை வால் இந்த வருமானக் குறைவு ஓரளவில் நிகழ்ந்திருக்குமே யாயி னும், அவ்வாறு தொடர்பாக வரிக்கழிவு செய்யவேண்டி வந்த செயலொன்றே விவசாயமானது சீர்கேடான நிலையிலிருந்த தென்பதை விளக்கும். ஒரு சில ஆண்டுகளில் திடீரென சாகு படிமிகுந்து விலைவாசி மிக இறங்கியு மிருக்கலாம்,

இவ்வாறாக விளைவானது குறைந்து வருகையில், ஜனத்தொகையானது மிகுந்துகொண்டே வந்தது. 1822-இல் சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 135 இலட்சமென மதிப்பிடப்பட்டது. அதற்குப் பின் எத்தனையோ பஞ்சமும் நோயும் கொள்ளை கொண்டதே யாயினும் 1851-ல் 220 லட்சமாக உயர்ந்துவிட்டது. இதனால் உணவுக்கான அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டியதாயிற்று அந்தக் காலத்தில் ஆரக்கானிலிருந்து இந்த இறக்குமதிகள் போந்தன. ஆரக்கானில் நெல் சாகுபடி செய்யவும், அதனை ஏற்றுமதி செய்யவும் அப்பொழுது சிறப்பான சில வசதிகளிருந்தன. 1834-க்கும் 1844-க்கு மிடையில் இந்த இறக்குமதி ஆண்டொன்றுக்கு சராசரி $9\frac{1}{2}$ லட்சம் ரூபாய் பெறுமானத்துக்கு நடைபெற்றது. 1836-க்கும் 1842-க்கும் இடையிலுள்ள ஆண்டுகளில்தான் இறக்குமதி மிகுதியாக வந்தது. இந்த இறக்குமதியால் அகவிலைகள் வெகுவாய் பாதிக்கப்பட்டது. இறக்குமதிகள் எந்த ஆண்டுகளில் அதிகமாக இருந்தனவோ அதனைத் தொடர்ந்தே விலையும் அதிகமாக இறங்கியது. உதாரணமாக 19 லட்சம் ரூபாய் பெறுமான தானியங்கள் 1840-41-ல் இறக்குமதியாக்கப்பட்டது. உடனே மறு வருடத்தில அகவிலை பின்னும் காற்பங்கு இறங்கிவிட்டது.

அந்தக் காலத்தில் உள்நாட்டு வாணிபமோ அயல் நாட்டு வாணிபமோ அதிகமாக வளர்ச்சி பெறவுமில்லை. உள்நாட்டு வியாபாரம் குன்றியிருந்தது அன்றைய பொருளாதார நிலையின் சிறப்பியல் என்று சொல்லலாம். இது எதனாலெனில், தக்கபடியான வழிப்பாதைகளோ, அன்றி வேறுவித போக்குவரத்து வசதிகளோ இல்லாமையாலும், வாணிபம் தட்டுத்தடையின்றி இயங்க முட்டுக்கட்டையாயிருந்த சுங்கங்களின் மிகுதியாலுமேயாம். ஒழுங்காய்ச் சமைந்த பெருவழிகள் நாட்டில் மிகச் சிலவேயாம். எனவே வண்டிப் போக்குவரத்துக்கு வழியே இல்லை. கோடைகாலத்தில் கால்நடைப் போக்குவரத்து ஒருவாறாக எளிதாயிருந்ததெனினும், குளிர்காலத்தில் பாலங்களில்லாத ஆறுகளாலும், சேற்றுப் பரப்புக்களாலும் போக்குவரவு தடைபட்டது. பெரு வழிகளும் பாலங்களும் அமைந்தவிடத்தும், சுங்கக்காரர்களின் தொல்லை மிகுதியால் போக்கு வரவுக்கு இடையூறு ஏற்பட்டது. சுங்கங்களைக் குத்தகைவிடும் முறை இங்கு கையாளப்பட்டு வந்ததால் சென்னை மாகாணத்திலேயே இந்தத் தொல்லை சிறப்பாக மிகுந்திருந்தது. காட்டன் என்பவர் தமது அறிக்கையின்கண்ணே, "நாம் உள்நாட்டு வாணிபத்தின்மேல் வரி சுமத்தும்முறையால், இந்தியாவின் வாணிபம் குன்ற எப்பாற்பட்ட மக்களும் ஊக்கமிழந்து இடுக்கண் வாய்ப்பட்டுத் தவிக்கச் செய்கின்றோம்" என்று கூறுகின்றார்.

அயல்நாட்டு வாணிபமோவெனில் அந்தக் கதை இதனினும் கண்ணராவியானதாகும். மிளகும் காலிக்கோவும் மிகுதியாக வேண்டப்பட்ட காலத்து, வெளிநாட்டு வாணிபமும் செழித்திருந்தது. ஆனல் அவற்றின் தேவை குறையவே வாணிபமும் சோர்வடைந்தது. நெசவாளிகள் தொழிலின்றித் திண்டாடினர். சிலர் பண்ணைக் கூலியாட்களாயினர். பலர் ஆண்டிகளாயினர். 18-ம் நூற்றாண்டிலே, கரையின்பாலிருந்த துறைமுகங்களுக்கிடையே இந்தியக் கப்பல்கள் விரைந்து சென்று செழித்த ஒரு வாணிபத்தை நடத்திவந்தன. மசூலிபட்டினம், நாகபட்டினம், தூத்துக்குடி, கொச்சி முதலியன அன்று மிகத் தலைமையான துறைமுகங்களாயிருந்தன. ஆனல் ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டதோடு இந்தியா கப்பற்சட்டங்களால் (Navigation Acts) கட்டப்படவே, கப்பற்றொழிலிலும், வாணிபத்திலும் உள்நாட்டு முயற்சி குன்றி ஒடுங்கியது. 1840 வரையேனும் வெளிநாட்டு வாணிபம் ஒடுங்கியே இருந்தது. இது கம்பெனியின் ஆங்கிலத் தலைவர்களிடமிருந்து பெருத்த கூக்குரலை எழுப்பிற்று. சுங்க வரியே மிகுதியாகக் குறைந்ததென்பது கீழ்வரும் புள்ளிகளால் விளங்கும்.

ஆண்டு.	கரைச் சுங்கம் Land customs	கடற் சுங்கம் Sea customs
1828—29	ரூ. 41,89,703	ரூ. 10,55,917
1833—34	ரூ. 33,97,200	ரூ. 6,80,543

1840 முதல் வெளி வாணிபமானது தலையெடுத்திருப்பதாய்க் காணப்படுகின்றது. ஆனல் இது மிக மெதுவாக நத்தைவேகத்திலிருந்தது என்பது 1834-க்கும் 1850-க்குமிடையில் மொத்த ஏற்றுமதி வாணிபம் 50 இலக்ஷமே அதிகரித்துள்ளது என்பதால் வெளிப்படையாகும். வங்காளமும் பம்பாயும் இந்த விஷயத்தில் மேலாக இருந்தன.

VII

முடிவுரை

இப்பொழுது நாம் இவ்வாராய்ச்சியின் பல பாகங்களையும் ஒன்றுகூட்டுவோம் பரந்துபட்ட ஒரு விலை இறக்கமானது, நாணயத்தின் தொகை சுருங்கியதாலோ, அல்லது அதன் தேவை மிகுந்ததாலோ, அதாவது அது செய்யப்படவேண்டும் பணிகள் மிகுந்ததாலோ, அன்றேல் இரண்டினுலுமேயோதா னிருக்கவேண்டும். இந்தக் கட்டத்தில், (1) கைப்புழங்கிவந்த நாணயத்தின் தொகை

1820-க்கும் 1850-க்கு மிடையில் குறைந்தது என்பதும் (2) பண்டமாற்றல் நிலைபோய் நாணய நிலை வந்ததாலும், வெளி நாட்டு வாணிபம் சற்றேயாயினும் விரிந்துள்ளதாலும், எஞ்சிய நாணயங்கள் செய்யவேண்டும் பணிகள் பல்கினவென்பதும் நாம் அறிகின்றோம். இவ்விரு நிகழ்ச்சிகளும் ஏககாலத்தில் நடந் தேறிக்கொண்டிருந்தமையால், விலையானது நீண்டகாலத்து ஆழ்ந்த அளவுக்கு இறங்கிவிட்டது. ஆனால் தலைமையான காரணம் நாணயம் குறைவுபட்டதேயாகும். மேலே விவரித்த பற்பல காரணங்களால் நாட்டில் நாணய முட்டுப்பாடு எழவே இந்தியப் பொருளாதார நிலையிலேயே பெரியதொரு நெருக்கடி விளைவதாயிற்று.

1850-க்குப் பின்னர் இந்நிலைகள் மாறுதலடைந்தன. காலிபோர்னியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் தங்கச் சுரங்கங்களைக் கண்டுபிடித்ததன் பயனாகப் பொன்னின் உற்பத்தி மிகுந்து உலகமெங்குமே என்றுமில்லாத அளவு விலைவாசி ஏறுவதாயிற்று. இதனால் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பலவித புத்தப் புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ் முதலாளிகளால் சமைக்கப்பட்ட இரயிற்பாதைப் பணிகளாலும், தேயிலை, இரப்பர், காப்பி முதலிய தோட்டப்பயிர்த் தொழிற்களாலும் பலவகைப்பட்ட கைத்தொழிற் சாலைகளின் ஏற்பாட்டாலும் வெளிநாட்டிலிருந்து ஏராளமான திரவியம் இந்தியாவுட்புகுந்தது. இத்தோடு இந்தியச் சணலும், காப்பியும், தேயிலையும் மிகுதியாக வெளிநாட்டினரால் வேண்டப்படவே, தங்கமும் வெள்ளியும் இந்தியாவை நோக்கி மீண்டும் பாயத்தொடங்கின. 1860-க்கும் 70-க்குமிடையில் இலங்காஷயரில் வந்த பருத்திப் பஞ்சத்தால், இந்திய ஏற்றுமதி என்றுமில்லா அளவுக்கு விரியவோர் தருணம் வாய்த்தது. அதனோடு சூயசு வாய்க்கால் தோண்டப்பெற்றதும் பெருநன்மையாக முடிந்தது. 1854-முதல் விலை ஏறிக்கொண்டேபோனது. 1873 முதல் 1896 வரை ஐரோப்பாவில் நிகழ்ந்த பெரும்பொருளாதார நெருக்கடியில்கூட ரூபாயின் நாணயமாற்று விகிதம் அதுகாலையில் விடாது குறைந்துகொண்டிருந்ததன் பயனால் இந்தியாவுக்கு இன்னல் விளைந்திலது. (முற்றும்)

கவின்கலைப் பகுதி:

Fine arts

மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய

மத்த விலாசம்

களிக்கூத்து

[திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்]

(முன் ௩௯-ம் பக்கத் தொடர்ச்சி)

கபா:—அதைத்தான் நான் பார்க்கவேண்டு மென்கிறேன்.

புத்த:—இல்லை நண்ப! அப்படிச் சொல்லாதே. நாங்கள் அதை மூடித்தான் கொண்டு போகவேண்டும். அதுவும் உனக்குத் தெரிந்தது தானே?

கபா:—ஆமாம் உண்மைதான். இந்த மாதிரிப் பொருள்களை ஒளித்துக்கொண்டு போவதற்காகத்தானே உங்கள் புத்தன் உங்களை நீண்ட உடையைத் தரிக்க விதித்திருக்கிறான்!

புத்த:—அது வுண்மைதான்.

கபா:—அது பாதி வுண்மை. ஆனால் உனக்கு முழு வுண்மையும் தெரியவேண்டும்.

புத்த:—சரி, சரி; போதும் உன் கேலி. பிச்சைப்பொழுது போகிறது. நான் செல்லவேண்டும். (பக்கலில் நகருகிறான்)

கபா:—அடே! போக்கிரி! எங்கு போவாய்? என் கபாலத்தைக்கொடுத்து விட்டுப் போ.

(அவன் உடையைப் பிடித்து இழுக்கிறான்).

புத்த:—புத்தனே! போற்றுவோம்!

கபா:—கபடனைப் போற்று என்று சொல்! அவன்தானே, களவு நூல் இயற்றியவன். ஆனால் புத்தன் அவனுக்கு அப்பன்

அந்தணர்கள் கண்கள் அயர்ந்திருந்த காலையினில்
தந்திரமாய் புத்தன் சரக்கறையை—முந்தி
உபநிடத பாரதத்தினொண் பொருள்கள் வெளவி
அபகரித்து வைத்தான் அறி.

புத்த:—பாபம் சாந்தி! பாபம் சாந்தி!

கபா:—இந்தத் தூய்மையான துறவிக்கு எந்த பாபம்தான் சாந்தியாகாது!

தேவ:—ஐயா! நீங்க நினைத்ததுபோல தெரியுது. அந்த மண்டை ஓடு லேசா கிடைப்பதா தோணலெ. இந்தக் கொம்பிலெ இருக்கிற கள்ளைக் குடிச்சு கொஞ்ச திடப்படுத்திக்கிட்டு அவங்ககூட சண்டை போடுங்க.

கபா:—அப்படியே (தேவசோமா கள்ளைக் கொடுக்கக் கபாலி வாங்கியுண்கிறான்) பெண்ணே! நீயும் கொஞ்சம் சாப்பிடு, துவண்டு போயிருக்கிறாய்.

தேவ:—ஐயா! உங்க சித்தம். (அவளும் குடிக்கிறாள்)

கபா:—இந்தப் பயல் நம் துரோகிதான். இருப்பினும் எதையும் எல்லோரோடும் பகிர்ந்து வுண்ணவேண்டுமென்பது நம்மதக் கொள்கை. ஆகையால் எஞ்சியிருப்பதை அத்துறவிக்கும் கொடு.

தேவ:—ஐயா! உங்க உத்தரவு. (புத்த சந்நியாசியைப் பார்த்து) இந்தாங்கோ ஐயா!

புத்த:—(தனக்குள்ளே) என்ன அதிர்ஷ்டம்! ஆனால் யாரேனும் பார்த்துவிடுவார்களென்ற ஒரு பயம்தான். (அவளைப் பார்த்து) இல்லை அம்மா! அப்படிச் சொல்லாதே. அது என் போன்றவர்க்குத் தகுதியல்ல. (வாயைச் சப்புகொட்டுகிறான்)

தேவ:—போ! தொலை! இந்த மாதிரி அதிர்ஷ்டம் உனக்கு எங்கே கிடைக்கப் போவுது?

கபா:—பெண்ணே! அவன் நாவில் நீர் சொட்டுகிறது; அதனால் சொல் குழறுகிறது.

புத்த:—இன்னும் உங்களுக்கு என்மீது இரக்கமில்லையா?

கபா:—இரக்கமிருந்தால் நான் எப்படி முற்றும் துறந்த முனிவனாவேன்!

புத்த:—அப்படியானால் முற்றும் துறந்த முனிவர்க்கு முனிவு ஏன்?

கபா:—என் பொருளைக் கொடுத்துவிட்டால் எனக்கு உன் மேல் முனிவென்ன?

புத்த:—உன் பொருள் எது?

கபா:—கபாலம்.

புத்த:—என்ன! கபாலமா?

கபா:—'என்ன! கபாலமா?' என்று கேட்கிறான். இம்! இதில் வியப்பென்ன? இந்த உலகமே பொய்யென்ற புத்தன் புதல்வன் நீ. அவன் கடல், மலை, ஆறு எல்லாவற்றையும் மறைத்திருக்க உனக்கு இந்தச் சிறிய கபாலத்தை மறைப்பதற்கு முடியாதா என்ன?

நிலைகொள் பூதங்கள் நிற்பன யாவையும்
மலைவ தென்ன மறுத்திடும் புத்தனார்
நிலவு மைந்த னெனப்படு நீபலிக்
கலம றைத்துக் கழறல் அரியதோ?

தேவ:—ஐயா! மயிலே மயிலேன்ன இறகு போடாது. அவங்கிட்டெருந்து வெடுக்குனு பிடிங்கிக்குங்க.

கபா:—பெண்ணே! அதுதான் சரி, அப்படியே செய்கிறேன்.

(அவன் கையிலிருந்து ஓட்டைப் பறிக்கப் பார்க்கிருன்.)

புத்த.—போடா! போக்கிரி கபாலி! (அவன் கையை உதறி விட்டு அவனே உதைக்கிருன்.)

கபா:—நான் எப்படி விழுந்தேன்!

தேவ:—டே! நீ செத்தே. (சந்நியாசியின் தலையைப்பற்றி இழுக்க எத்தனிக்க மொட்டைத் தலை கையில் பிடிபடாமல் கீழே விழுகிருள்.)

புத்த:—(தனக்குள்ளே) தலையை மொட்டை அடிக்கச் சொன்ன புத்தன் திரிகால ஞானி! (உரக்க) அம்மா! எழுந்திரு, அம்மா! எழுந்திரு. (தேவசோமியைக் கைகொடுத்துத் தூக்கி விடுகிருன்.)

கபா:—பாருங்கள் மாகேஸ்வரர்களே! பாருங்கள்! இந்த நாகசேனன் என்ற போலிச் சந்நியாசி என் நங்கையைப் பாணிக்கிரகணம் செய்கிருன்.

புத்த:—நீ அப்படிச் சொல்லாதே. துன்பத்தில் விழுந்தோரைக் கைதூக்கி விடுவது எங்கள் மதக் கொள்கை

கபா:—இதுதான் உங்கள் வாலறிவனும் புத்தனுடைய மதமோ? நான் முன்னே விழவில்லையா? பரவாயில்லே. இப்பொழுது உன் மண்டைவோடு என் திருவோடு ஆகப்போகிறது பார். (எழுந்து சண்டை யிடுகிருன்.)

புத்த:—ஒ. அனிச்சம். துக்கம். அனர்த்தம்.

கபா:—பாருங்கள் மகேஸ்வரர்களே! பாருங்கள்! இப்போலி புத்த சந்நியாசி என் கபாலத்தை எடுத்துக்கொண்டதுமல்லாமல் ஒலமும் இடுகிருன். நல்லது நானும் கூவுகிறேன். "ஒரு பிராமணனைக் கொல்லுகிருர்கள்! ஒரு பிராமணனைக் கொல்லுகிருர்கள்."!

(ஒரு பாசுபதன் வருகிருன்)

பாசு:—ஐயா! சத்திய சோமரே ஏன் கூச்சலிடுகிறீர்?

கபா:—ஒ, பப்ருகல்பா! இந்த நாகசேனனென்ற திருடன் என் கபாலத்தை எடுத்துக்கொண்டு கொடுக்கமாட்டேன் என்கிருன்.

பாசு:—(தனக்குள்ளே) நாம் செய்ய நினைக்கும் நியாயம், காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனனென்ற நியாயம்தான். இச் சந்நியாசிக் குடிலன் பசும்புல்லேக் காட்டி பசுவை இழுப்பதுபோல தன் கையில் காசைக் காட்டி எனது மனதிற்கு உவந்த இவளைக் கவரப் பார்க்கிருன்.

ஆகையால் நான் இக் கபாலியைத் தூண்டிவிட்டு என் காரியத்தை நிறைவேற்றிக்கொள்கிறேன். (வெளிப்படையாக) நல்லது நாக சேனு! இவன் சொல்கிறபடிதானு?

புத்த :—என்னையா! நீரும் அப்படிப்பேசுகிறீர்! ஈயாததை எடாதது எங்கள் மதக் கொள்கை. பொய்மையே புகலாதது எங்கள் மதக் கொள்கை. பிரமச்சர்யம் வழுவாமலிருப்பது எங்கள் மதக் கொள்கை. உயிர் செகுத்துண்ணுதது எங்கள் மதக் கொள்கை. குறித்த காலம் தவறி வுண்ணுதது எங்கள் மதக் கொள்கை. ஆகையால் எம்முடைய சமயந்தான் எனக்குப் புகலிடம்.

பாசு :—நல்லது, சத்திய சோமா! அவர்கள் நெறி அப்படி. இதற்கு நீ என்ன சொல்கிருய்?

கபா :—எங்கள் நெறி, பொய்மையே புகலக் கூடாதென்பது

பாசு :—இருவர் சொல்வதும் சரிதான். இதனை எப்படி மத்தியஸ்தம் செய்வது?

புத்த:—புத்த சமயத்தைச் சேர்ந்த எனக்கு இக்கபாலியினுடைய கள் கலயம் எதற்காக?

பாசு:—உண்மைதான். ஆனுல் அப்பொருள் உனக்கு வேண்டுவதில்லை என்று சொன்னதினுல் நீ எடுக்கவில்லையென்று எப்படிப் புலனுகிறது?

கபா:—அவன் எடுத்தது வெள்ளிடை மலைபோல் யாவர்க்கும் தெரிந்திருக்க, எடுக்கவில்லையென்று காரணம் காட்டுதல் பயனற்றது.

பாசு:—நீ வெள்ளிடை மலைபோல் என்று சொன்னதின் கருத்து யாது?

தேவ:—ஐயா! அந்த ஓட்டை அவன் துணியில் மறைத்து வைத்திருக்கான்.

பாசு:—சந்நியாசி கேட்டாயா?

புத்த:—ஓ! ஐயா! இந்தக் கப்பரை வேறு யாருடையதுமல்ல.

கபா:—அப்படியானுல் காண்பி, பார்ப்போம்.

புத்த:—ஆகட்டும் (கப்பரையைக் காண்பிக்கிருன்)

பாசு:—மகேஸ்வரர்களே! பாருங்கள்! கபாலி செய்ய நினைத்த தீங்கையும் இச்சந்நியாசியின் செம்மை நெறியையும்!

புத்த:—ஈயாததை எடாதது எங்கள் மதக்கொள்கை. பொய்மையே புகலாதது எங்கள் மதக்கொள்கை. பிரமச்சர்யம் வழுவாமலிருப்பது எங்கள் மதக்கொள்கை. குறித்த காலம் தவறி வுண்ணுதது எங்கள் மதக்கொள்கை. ஆகையால் எம்முடைய சமயந்தான் எனக்குப் புகலிடம்.

(கபாலியும் சந்நியாசியும் கூத்தாடுகிருர்கள்)

புத்த:—சீ! வெட்கமில்லாமல் கூத்தாடுகிருன்.

கபா:—ப்பு! யார் கூத்தாடரா? (முற்றும் சுற்றிப்பார்த்து) இந்த சங்கியாசி நான் கூத்தாடுகிறேன் என்று நினைத்துக்கொண்டான். ஆனால் நான் அல்ல. என்னுடைய ஆனந்தமென்ற மெல்லிய கொடி காணுமற்போன கபாலத்தைக் கண்டதால் உண்டான உற்சாகமென்ற தென்றலால் அகப்பட்டு இங்குமங்கும் அசைகிறது.

புத்த:—இக்கப்பரையைச் சரியாய்ப் பார்க்கமாட்டேன் என்பதற்குக் காரணம் யாது? ஐயா! பெரிய மனதுசெய்து இதன் நிறத்தைப் பார்க்கவேண்டும்.

கபாலி:—அதைப்பற்றி நான் என்ன சொல்லக்கிடக்கு? எனக்குக் கண் தெரியவில்லையா? இந்தக் கபாலம் காக்கையிலும் கருமையாயிருக்கிறது.

புத்த:—ஆகையால் இது என்னுடையதுதான் என்று இப்பொழுது நீயே ஒத்துக்கொண்டாய்.

கபாலி:—உண்மைதான்; நீ நிறத்தை மாற்றுவதில் தேர்ந்தவனென்று ஒப்புக்கொண்டேன். இதோ நீ அணிந்திருக்கும் ஆடை, தாமரை நூல்போல் வெள்ளை வெளேரென்று இருந்ததை வைகறையில் செவ்வானமிட்டதுபோல் சிவக்கச் செய்துவிடவில்லையா? மேலும் காஷாயத்தால் உள்ளும் புறமும் மூடியிருக்கும் உன்னை அடைந்த மாத்திரத்தில் அந்தக் கபாலத்தின் நிறம் வேறுவதில் விந்தையென்ன?

தாமரை நூலன்ன தவளவுடை செவ்வான
மாமிது போலுள்ளம் அமையுமெனில்—காமுறுவெண்
சங்கனைய கபாலம் தன்னிறந்தான் மாறுவதிங்
கென் புதுமை யேதுமிலையே.

தேவ:—ஐயோ! ஏழை நான் கெட்டேன். பிரம்மாவுடனேர்த்தியான கபாலம் சந்திரனைப்போல பளபளப்பும் சதா கள்ளு நாற்றமும் வீசிய எங்க கபாலம் இந்த வீணுபோன பயல் தொட்டு இம்மாதிரிப் போச்சே. (இவள் அழுகிருள்)

கபாலி:—இல்லை என் கண்ணே! அழாதே. அதை மறுபடியும் பரிசுத்தப்படுத்தி விடலாம். தேவர்களும் பிராயச்சித்தத்தினுல் தங்கள் பாபவிமோசனம் ஆகி புனிதராகிருர்களென்று நம் வேதம் கூறும். உதாரணமாக நம் கடவுள், பிறை அணிந்த பெம்மான் நான்முகனின் தலையைக் கிள்ளிவிட்ட பாபமும், தேவர்க்கதிபதியான இந்திரன், துவஷ்டாவின் மகனை விருத்திரனைக்கொன்ற பாவமும் பிராயசசித்தத்தால் தீரவில்லையா? எ பப்ருகல்பா! அப்படித்தானே?

பாசு:—உன் கூற்று வேதத்திற்கு ஒத்ததே.

புத்த:—நல்லது. நானே நிறத்தை மாற்றிவிட்டேனென்று

வைத்துக்கொண்டாலும் இக்கப்பரையின் உருவத்தையும் பருமனையும் யார் மாற்றினார் !

கபா:—நீங்களெல்லாம் மாயாதேவியின் வம்சமல்லவா ?

புத்த:—உன்னோடு எவ்வளவு நாழி இந்த வழக்கு; இந்தரா எடுத்துக்கொள்.

கபா:—இதான் புத்தனுடைய கருணை வெள்ளம்.

புத்த:—இந்த என் பரிதாப நிலையில் எனக்கு யார் துணை ?

கபா:—புத்தன்! தர்மம்! சங்கம்! மும்மணிகள் தாம்.

பாசு:—இந்தச் சண்டை என்னால் தீர்க்க முடியாது. ஆகையால் நாம் நீதி மன்றம் போவோம் வாருங்கள்.

தேவ:—அப்படியானால் ஐயா! அந்தக் கபாலத்திற்கு ஒரு கும்பிடு.

பாசு:—உன் கருத்து என்ன?

தேவ:—ஏ! இந்த மனுஷன்! பள்ளியில் வரும்வரும்படியால் கொழுத்த பணக்காரன். அதைக்கொண்டு நீதிமன்றம் அதிகாரிகளுக்கு வாக்கரிசி போட்டுவிடுவான். நானோ பாம்புத் தோலும் சாம்பலுமே அஸ்தியாயுடைய ஓர் ஏழைக் கபாலியின் அடிமை. நான் வழக்குக்குப் போக காசு எங்கே யிருக்கு ?

பாசு:—அப்படியல்ல. நம் நீதிபதிகள் கருங்கல் தூண் அனையர். நேர்மையும் நடு நிலைமையும் தூய்மையும் உறுதியும் வாய்ந்த மனத்தினர்; நற்குடிப் பிறந்தோர்.

கபா:—போதும்; போதும். நல்லவன் எதற்கு நாண வேண்டும். போவோம்.

புத்த:—நல்லதய்யா, நீவிர் முன்னே போம்.

பாசு:—அப்படியே. (எல்லோரும் செல்கின்றனர்)

(தொடரும்)

மூன்றம் களம் முற்றும்.

"செல்வி"யைப் போற்றுமின் !

செய்கட னாற்றுமின் !

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு, திருநெல்வேலி

வரவேற்புத்தலைவர்

உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., M.L.,

உரை

(முன் ருஅ-ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழ்மொழியின் நெடுங்கணக்கானது பேச்சொலிகளின் மூலங்களாகிய தனி ஒலிகளினாலேயே அமைக்கப்பட்டிருப்பதை நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும். எழுத்துச் சுருக்கத்தின் பொருட்டுச் சிறிது திரிவுபடும் ஒலிகளுக்கு வெவ்வேறெழுத்துக்கள் அமையாமல் திரிபுணர்த்துஞ் சூத்திரம் ஒன்றையே இலக்கணநூலார் வகுத்துப் போந்தனர். காலஞ்சென்ற டாக்டர் கால்டுவேல் என்பார் கூறும் வல்லின மெய்யின் ஈரோசைக் சட்டமும் அதன் சார்பாயதே. ககரமானது, கடல் என்ற சொல்லில் வல்லோசை யுடையதாயும், நகம் என்பதில் இடையோசை யுடையதாயும், வங்கம் என்பதில் மெல்லோசை யுடையதாயும் இருப்பதற்குச் சூத்திரம்,

> "எடுத்தல், படுத்தல் நலிதல் உழப்பில்
> திரிபுந் தத்தமிற் சிறிதுளவாகும்." என்பதே.

நகம், நக்கன், பசை, பச்சை, வடம், வட்டம், பதி, பத்தி, கபம், கப்பல், அறம், அற்றம் என்பன, ஈரோசைச் சட்ட எடுத்துக்காட்டுக்களாதல் காண்க. மெய்யெழுத்துக்களின் பிறப்பை ஆய்ந்தால், தமிழிலுள்ள மெய்யெழுத்துக்களைக் குறைத்தல் கூடாதென்பது விளங்கும்.

நாக்கின் அடிப் பாகம், மேல் வாயின் அடிப் பாகத்தைத் தொடுவதால் எழும் ஒலி ககரமாகும். நாக்கின் அடிப் பாகமும், நடுப் பாகமும் மேல் வாயைத் தொடுவதால் யகரம் உண்டாகும். நாவின் நடுப் பகுதி, மேல் வாயின் நடுப் பகுதியைத் தொடுவதாற் சகாரமுண்டாகும். நாவின் கடைப் பகுதி மேல் வாயின் கடைப் பகுதியைத் தொடுவதால் டகா முண்டாகும். நாக்கின் கடைப் பாகம் மேல் வாயைத் தடவுவதினால் ரகாமும், ஒற்றுவதினால் றகாமும், அழுத்தமாய் உறழ்வதினால் ழகாமும் உண்டாவன. நாவின் நுனி பரந்து மேல்வாய்ப் பல்லினடியைப் பொருந்துவதால் தகரம் உண்டாகும் நாவின் நுனி திரண்டு மேல் வாயின் கடைப் பகுதியை ஒற்றுவதால், லகாமும், தடவுவதால் ளகாமு முண்டாகும். மேல் வாய்ப் பல் கீழுதட்டைத் தொடுவதால் வகாமும், இதழிரண்டும் மூடித் திறப்பதால் பகாமுமுண்டாவன. வல்லெழுத்துக்களாகிய க, ச, ட, த, ப, ற என்பன தோன்றுமிடத்தே மூக்கினோசை ஒலிப்பதால் ங, ஞ, ண, ந, ம, ன என்

னும் மெய்யெழுத்தொலிகள் உளவாம். ய, ர, ல, வ, ழ, ள என்பன நாவானது மேல் வாயின் பல பகுதிகளை எளிதாகப் பொருந்துவதால் தோன்றும் இடையெழுத்துக்களாவன. பிற எழுத்தொலிகளெல்லாம் கலப்பொலிகளே. இவ்வொலிநூலுண்மையை உள்ளத்திற்கொண்டு எழுத்துக்களைக் குறைப்பதைப்பற்றி யாய்வாம்.

ரகாரத்தையும், றகாரத்தையும் ஒன்றாக்கினால் சொற்குழப்பம் ஏற்படும். றகரத்தாற் புலனாகும் வீரச் சுவை மறைந்தொழியும். 'அற்ற தலை போக அறாத தலை நான்கினையும் பற்றித் திருகிப் பறியேனோ' என்பதிலுள்ள சினவாற்றல் றகரத்தைப் பொறுத்ததே. ஆசிரியனென்னும் பொருள் படும் குரவரும், மலைவேடரைக் குறிக்கும் குறவரும் ஒரு சொல்லாகும். அரமும், அறமும் ஒன்றாம். விரலும் விறலும், அரையும் அறையும் தலைமயங்கி அவ்வவற்றின் பொருளாற்றல் வேறுபாட்டைத் தொலைத்துவிடும். னகரத்தை ஒழித்துவிட்டால், றகரத்திற்கினமாய மெல்லோசை இன்னதென்பது விளங்காது. மொழிக்கு முதலில் வாராத எழுத்தைப் பற்றிய சூத்திரத்தை மாற்றவேண்டும். ழகாரத்தை ஒழித்தால் மாட்டுக் குளம்பும், உணவுக் குழம்பும் ஒன்றாவதுடன் தமிழிற்குரிய சிறப்பெழுத்தும் போய், அவ்வெழுத்துள்ள சொற்கள் தமிழ்ச் சொல்லென்ற கருத்திற்கிடமிராது. வடமொழியில், லகரமே, முதலில் உண்டு, பின் ளகரம் வந்தது. ல ள வேற்றுமை கிடையாது. தமிழில் லகரமும், ளகரமும் வேறுதல், கல், கள், வில், விள், கலம், களம், வல், வள், கொல், கொள் என்பவற்றின் பொருள் வேறுபாட்டாலறியப்படும்; பிறவும் அவ்வாறே கண்டுகொள்க.

தமிழ் எழுத்து வடிவுகளெல்லாம் கருவின் உருவாகிய ஓங்காரத்தில் நின்று தோன்றியன; ஆதலாலும், தமிழில் நெடுங்கணக்கிற்கு வடிவம் தனியே அமைந்திருப்பதாகிய செய்தியை மறைத்தல் வரலாற்றுண்மையை மறைத்தல் ஆகுமாதலாலும் தமிழின் வரியெழுத்துக்களை மாற்றுவது தவறாகும்.

அவ்வாறே தமிழ்ச் சொற்களையும் பாதுகாத்தல் வேண்டும். பிற எழுத்துக்களின் கலப்பு தமிழில் ஏற்படுங் காலத்தில் தமிழ் எழுத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறே அவைகள் சேர்க்கப்படவேண்டும் என விதி இருப்பினும் தமிழிலுள்ள சொற்களை இழவாதிருத்தற் பொருட்டும் தமிழ் மொழியின் ஆற்றல்களை விளக்கிக் காட்டுதற்பொருட்டும் புதுக் கருத்துக்களைத் தனித் தமிழ்ச் சொற்களாற் புலப்படுத்துதலே பொருத்தமாகும்.

தமிழ் மொழியிலே பிறமொழிச் சொற்களைக் கலத்தல் கூடாதென்பதைச் சிலர் நோக்கவொடுக்க மென்பர். அது தவறு. நூல் இழைப்பதும் ஆடை நெய்வதும் அறவே ஒழிந்த இந்நாட்டில், அவை தழைத்தற்பொருட்டுக் கதராடை யணிதல் வேண்டுவோரை ஒடுக்க நோக்கினர் என்று கூறுதல் தவறாதல்போல, தூய தமிழ்ப் பேச்சு மிகக் குறைந்து, தமிழ்ச் சொல்லாக்க முறைகள் பெரிதும் மறைந்தொழிந்த இத் தமிழ் நாட்டிலே அவை நிலைத்தற்பொருட்டுத் தூய தனித் தமிழ் வழங்கல் வேண்டுமென்றல் தக்கதேயாதல் காண்க.

சொல் என்பதை உரைப்பதற்கு மொழி, உரை, கூறு, இயம்பு, அறை, பறை, நொடி, ஒப்பு, பேசு, சாற்று, ஓது முதலிய பல சொற்கள்

பல உணர்ச்சிநயங்களை விளக்கத் தக்கவாறு தமிழில் அமைந்திருப்பவும், வசனித்தான், சம்பாஷித்தான் முதலிய அயற்சொற்களை வழங்குவோமாயின், தமிழிலுள்ள சொற்செல்வத்தையும், அதன் வகை நயங்களையும் நாம் அறியாதொழிவோம். வெவ்வேறு தொழிலுடையோர் வழங்கும் குழூஉக் குறிச் சொற்கள், மரபுச் சொற்கள் முதலியவற்றை, அத் தொழில்களைப் பற்றிய நூல்களை எழுத விரும்புவோர் கற்றுப் பயன்படுத்துதலை விடுத்து, பிறமொழிச் சொற்களை நேராகத் தமிழில் பயன்படுத்துதல், சருந்தனம் கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு அரிப்பரித்தெய்த்துப் பொருள் தேடுவதை யொக்கும். 'Centre of gravity' என்பதைத் தச்சர்மரபுச் சொல்லாக வழங்கும் 'ஏண்' என்னும் ஓரசைச் சொல்லாற் குறிப்பது எவ்வளவு எளிதென்பதைப் பாருங்கள். அவ்வாறே. தமிழ் மருத்துவ நூலிலுள்ள சொற்கள் பல, மருத்துவ நூற்கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுவதுடன், நம் முன்னையோர் நமக்கு வைத்த அரும்பொருட் குவியல் இன்னவென்றறிந்து நாம் மகிழ்தற்கும் ஏதுவாகும். வரலாற்று வளர்ச்சிக்கும் அது காரணமாகும். முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் காத்தல் நமது கடமையாதலறிக.

தமிழில் வந்து தங்கிவிட்ட பிறமொழிச் சொற்களைத் தமிழிலக்கண முறையில் வழங்குவதோடு, தமிழில் முன்னமேயுள்ள சொற்செல்வத்தை இழந்துவிடுதல் கூடாதென்பதே அறிஞர் கருத்து. வட சொற்கள் என்று கருதப்படும் பல சொற்கள் தமிழேயெனக் கருதவும் இடமுண்டு.

'ஆதி' என்ற சொல், உலகத்தை யாக்குங் கடவுளின் ஆற்றலைக் குறிக்கும். ஆ-பகுதி, இ-விகுதி, த்-எழுத்துப் பேறு. இது வட மொழியிலும் வழங்குகின்றது 'சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத் தொழிலும் வல்லதாம்' என்றவிடத்து 'ஆதி' என்பதற்கு அப்பொருள் கொள்ளாது, 'முதல்' என்று கொள்ளுதல் பொருந்துவதில்லை. சட்டி, சமழ்ப்பு என்பன தமிழ்ச் சொல்லாதலின், சகரம் மொழிக்கு முதலில் வாராதென்று கொள்ள இங்காளி விடமில்லை "தண்ணிதாய வெள்ளருவி, சலசலநுரைமணி ததும்ப" என்றவிடத்தில் நீர்வீழ்ச்சியின் ஓசையைச் சலசலவென்பது குறிக்குங்கால், அச்சொற்களைத் தமிழென்றல் தவறாகுமா? அவ்வோசையினின்று, சலம் என்ற சொல் வந்ததாயின் அது தமிழ்ச் சொல்லே. "பீடம்" என்பது தமிழிலே உயர்ந்த இருக்கையைக் குறிப்பதால், அதனைப் பீடு + அம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளுதல் தமிழ் முறைக்கொத்ததே. குட்டம், வேட்டி முதலிய சொற்கள் வட மொழியில் குஷ்டம், வேஷ்டி யென வழங்குமென்ப.

'ஆசை' என்பது தமிழில் வழங்கும் பெருவழக்காகிய வட சொல்லென்ப. 'ஆசு' என்பது குற்றமெனக் கொண்டு, பற்று வைத்தல் குற்றமாமென்ற கருத்தில் 'ஆசை' என்பது தமிழென்பாருமுளர். அனைய மொழிகளைத் தமிழெனவே கொள்வோமாக.

பிறசொற்களைத் தமிழிலக்கண முறைக்கேற்ப வழங்கலாமென்றல், அயல் நாட்டு நூலால் இந்நாட்டில் நெய்யப்பட்ட ஆடையை அணியலாமென்பதுபோ லாகும். எவ்வாறாயினும், தமிழிலுள்ள சொற்செல்வத்

தையும், அச்சொற்செல்வங் குறிக்கும் பெருமையையும் இழந்துவிடுதல் நன்றன்றென்பதையே தூய தமிழ்வாணர் வற்புறுத்த விரும்புகின்றனர்.

மேலை நாட்டு அறிவுநூற் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்துவதற்குப் புதிய சொற்கள் வேண்டுமாயின், சிலர் அவற்றை ஆங்கிலத்தில் உள்ளவாறே தமிழில் வழங்கலாமென்றும், அவற்றை வடமொழியிற் பெயர்த்து வழங்கலாமென்றும் கூறும் இரு கொள்கைகளுள் முன்னையதே சிறந்தது. ஆனால் அது தமிழ்வாணர்க்கு நீர்மோரிலே கருவேப்பிலை, மிளகாய் முதலிய வாசப் பொருள்களின் சாரத்தைச் சேர்க்காமல் அவற்றையே போட்டு, அவற்றால் தொண்டை விக்கும்படி செய்வதுபோலாம்.

தமிழ் மொழிக்கு அக்கருத்துக்களை யுணர்த்தும் ஆற்றலும், வழியும் உள்ளனவாயின் அவற்றைத் தமிழ்ச் சொற்களாலேயே தெரித்தல் தமிழ் மொழியின் ஓசை நயத்தைப் பாதுகாத்தற்கும் தமிழ்ச் சொல்லாற்றலை வளர்த்தற்குமேதுவாமென்பதனை நமதுள்ளத்தில் பதித்துக்கொள்ளவேண்டும். ஆங்கிலம், செர்மன் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும், புதிது புதிதாகக் காணப்படும் பொருள்களை யுணர்த்தப் புதுச் சொற்களை அமைத்தல் தெளிவு. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டு வெளிப்படுத்தப்பட்ட ரேடியம் என்னும் பொருளிற்கு அப்பெயர் புதிதாக வழங்கப்பட்டதேயாகும். ரேடியம் என்ற சொல் இந்நூற்றாண்டிற்கு முன் அப்பொருளைக் காட்டுவதற்குப் பயன்படவில்லை. அச்சொல் புதிதாக ஆளப்பட்டதுபோலத் தமிழிலும் அப்பொருளைக் குறித்தற்குக் கதிரி என்ற சொல்லை வழங்கலாம். தமிழ்ச் சொல்லாக்க முறையையும் மேலை நாட்டுச் சொல்லாக்க முறையையும் நன்கறிந்தவர்கள் தமிழிலே சொற் சுருக்கமாக மொழிகளையமைத்துக் கொள்ளுதல் கூடுமென்றறிவர். அறிவியற் சொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்கள் பல சித்தர் நூல்களிற் காணப்படும். கலக்கனிகளாகிய உலோகங்களின் தமிழ்ப்பெயர்களெல்லாம் சித்தர் நூலிற் காணப்படுவனவே. ரேடியமென்பது ஆயிர மாற்றுக் கரும்பொன் என்று சித்தர் நூலிற் பேசப்படும் பொருளே யென்பர். அஃதெவ்வாறாயினும் அதனைக் கதிரி யென்ற புதுச்சொல்லாலும் தமிழிற் குறிக்கலாம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுள் வழக்கையும் உலக வழக்கையுந் தெரிந்து இயல் நூல் அமைத்ததுபோல இரு வழக்கையுந் தழுவியே சொற்களை யாத்தல் கூடும். Acid என்பதற்குப் புளினி யென்றும் Alkali என்பதற்கு உப்பினி யென்றுங் கூறுவது பொருந்தும். பழம்நீ என்பது பழனி யெனவும், தண்ணீர் என்பது தண்ணியெனவும் வழங்குதல் காண்க. தர்க்க நூல் என்பதைத் தமிழில் அளவைநூலென்பர். திருவள்ளுவர் அதனை அளவென்றனர். "அளவறிந்தார் நெஞ்சத்தறம் போல" என்றது காண்க. கணக்குநூலை ஔவையார் "எண்" என்றது காண்க. அவ்வாறே Physics என்னும் பூதநூலைப் பூதமெனவும், Chemistry எனப்படும் கலவைநூலைக் கலவையெனவுங் கூறலாம். மின்சாரத்தை மின்னியெனவும் மினியெனவும் சுருங்கக்கூறலாம். இவ்வாறே பிறவற்றிற்கும் சுருக்கமான பெயர்களை அமைத்துக் கொள்ளலாம். நாளடைவில் அவை வழக்கத்தில் வந்துவிட்டால் வேற்றுமை தோன்றாது.

Train என்பதைத் தொடர் வண்டியெனத் தமிழில் கூறலாம். அச் சொற்ளுெடரே தொடரெனவும் வழக்கத்தில் வந்துவிட்டால் வேற்றுமை தோன்றாது. தமிழில் வழக்கமாயுள்ள சொற்களை அப்படியே வழங்கலாம். தபால், தந்தி யென்பன அத்தன்மையன. இம்முறைகளினாலே உணர்த்தமுடியாத சொற்களைக் கடன் வாங்கவேண்டியதிருந்தால் தமிழ் ஒலிநயம் கொடாமல் தமிழில் அவற்றை வழங்கலாமெனினும், ஆராயுங்கால் பிற மொழியில் புதுச்சொல் ஆக்குவதற்கு எவ்வளவு ஆற்றலிருக்கின்றதோ அவ்வளவு ஆற்றல் தமிழ்மொழியில் நிரம்பியிருக்கின்றதென்பது துணிபாதலின், எக்கருத்திற்கும் தமிழ்ச் சொல்லமைத்தற்குச் செய்யும் முயற்சி செவ்விதிற் கைகூடு மென்றறிக. ஆதலால் தூயதமிழே வழங்குதல் வேண்டு மென்னுங் கொள்கை நிலைபெறுதற்பாலதே. தமிழரின் ஒற்றுமையான ஊக்கமும், பொழுதும், விடா முயற்சியுமே அதற்கு வேண்டப்படுவனவாம்.

இதுகாறுங் கூறியவாற்றால், மக்கள் முதன் முதற்றோன்றிய இடத்திற்கருகில் வழங்கியதாய், அவர்களின் முதன் மொழியினின்றுங் கிளைத்த சீனம் முதலிய பண்டை உயர் மொழிகளுளொன்றாய், அவற்றுட் சிறந்த வளர்ச்சியும் இயலமைப்பு முடையதாய் இன்னும் நன்கு நின்றுலவுதலின் அப்பண்டை மொழிகளுள் முதன்மையதாய்த் தமிழ்மொழியானது திகழ்கின்றதென்பதும், தமிழ் நெடுங்கணக்கானது பேச்சொலிகளின் மூலங்களினால் அமைந்ததாய் அவற்றிற்குரிய வரிவடிவும் அவற்றொடு கலந்து பிற எழுத்தொலிகள் தோன்றுவதற்கு ஏதுவாய சார்பெழுத்துக்குள்ள வரிவடிவு முடைமையின், பேச்சொலிகள் பலவற்றையும் எழுதுதற்குரிய எழுத்துக்கள் தமிழிலே யிருப்பதால் பிறமொழியினின்று எழுத்துக்களைத் தமிழின்கண் சேர்த்தல் மிகையாவதுடன் தமிழ்மொழியின் எழுத்துச் சுருக்கத்தையும் சொற் செட்டையும் மூச்சுச்செட்டையும், இயலமைப்பையும் அது ஊறுபடுத்துமென்பதும், தமிழ்மொழியின் எழுத்துக்களைக் குறைத்தல் பேச்சொலியின் மூலங்களை மறைப்பதுடன் சொற்குழப்பத்திற்கும் உணர்ச்சிக் கேட்டிற்கும் மொழிச்சிறப்புக் குன்றுதற்கும் ஏதுவாமென்பதும், தமிழின் தூய்மையையும் சொற்செல்வத்தையும் ஆற்றலையும் பாதுகாத்தற் பொருட்டும் பிறமொழிக் கலப்பினை நீக்குதல் நலமாமென்பதும், பிறமொழிகளைத் தமிழிற் கலப்பதானால் தமிழின் இயலமைப்பும் ஓசை நயமும் பழுதுபடாவண்ணம் அவற்றைச் சேர்த்தல் கூடுமாயினும் புதுக் கருத்துக்களுக்குப் புதுச் சொற்களையே பிற நாட்டினர் வகுத்தாள்வதுபோல அக்கருத்துக்களுக்குப் புதுச்சொற்களை நயம்பெற அமைத்துக் கொள்ளும் ஆற்றல் தமிழுக்குண் டென்பதும், அவ்வாற்றலை வளர்த்தற்குத் தமிழறிஞரின் ஒத்துழைப்பும், ஊக்கமுமே வேண்டுமென்பதும் அறியற்பாலன.

நமது தாய்மொழியாகிய தமிழானது புனிதமும் வனப்பும் வளமுங் குன்றாது என்றுமியங்கும் முதற் பெருமொழியாக உலகில் திகழும் வண்ணம் இம்மாநாடு செய்யும் பெரு முயற்சியானது முற்றிலுங் கைவருமாறு முழுமுதல் துணைபுரிக.

செந்தமிழ்ப் புரவலர்,

உயர்திரு த. வே. உமாமகேசுரன் பிள்ளை அவர்கள் B.A., B.L.

தலைமைப் பேருரை

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் இந்திய நாட்டின் நிலையினையும், பிற நாடுகளின் நிலையினையும் ஒப்புநோக்குவோர் பிற நாடுகள் இருளடர்ந்திருக்கவும், தமிழ்நாடு மட்டும் நாகரிகச் சுடர் பரப்பி, செல்வமும் கொற்றமுங் கொண்டு, தலை நிமிர்ந்திருக்கவும் காண்பர். சேர சோழ பாண்டியராய முடியுடை மூவேந்தரும் செந்தமிழ்ப் புலவர்களைத் தமது துணைவராகவும், தோழராகவும் நட்புக் கொண்டு கொடைமடம் பட்ட வள்ளன்மையால் அவர்களைப் பேணிப் புரந்து வந்தனர். மன்னர் முதல் ஊழியர் ஈறாகப் பல நிலையிலுள்ளவர்களும், ஆண்பாலரே யன்றிப் பெண்பாலரும் புலமையிற் சிறந்த கலைவாணராய்த் திகழ்ந்தனர். கல்வி, பிழைப்பிற்கு வழியாய்க் கருதி இற்றை நாளில் பயிலப்படுவதுபோல் பண்டை நாளில் பயிலப்பட்டதில்லை; பல்கலைக் கழகத்தினர் வழங்கும் பட்டங்களைக் கலைவாணர் பெறுவதும், பெற்ற பின்னர் ஊழியங்களைத் தேடி அலைவதும், அலைந்து திரிந்து பதவிகளில் அமர்ந்த பின்னர், தாம் அரிதிற் கற்றுத் தேர்ந்த கலைகளின் பயிற்சியை நெகிழ விட்டு ஊதியம் ஒன்றனையே கருதுவதும்போல் அற்றை நாளிற் கருதினாரில்லை. அவிச் சுவையினும் கவிச் சுவையே அயராத இன்பத்தை அளிக்கும் பெற்றியதெனத் தெரிந்து, நுண்மாண் நுழைபுலன் கொண்டு ஆய்ந்து கலை யின்பத்தில் மாந்தர் திளைத்தனர். அறிவுடை யொருவனை அரசனும் விரும்பிப் போற்றியபடியால் தமிழ்நாடு கலை மலிந்த நாடாய்த் திகழ்ந்தது. இயல், இசை, நாடகம் எனுங் கலைகளே யன்றி ஓவியம் ஆகிய கவின் கலையும் சிற்பம் ஆகிய தொழிற்கலையும் ஆய கலைகள் அறுபத்து நான்கும் செழித்து வளர்ந்தன. கலையின் நுண்பொருள்களைக் கூறுதற்கான குறியீட்டுச் சொற்கள் தமிழில் இல்லையே எனப் பண்டைக் காலத்துத் தயங்கினாரில்லை. திரிசொற்களைப் பெய்து நூலெழுதுவதும், இருநூற்றின் மேற்பட்ட எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் இருப்பதும், வேற்று மொழிகளின் ஒலிக் குறிகளுக்கேற்ப தமிழில் சில பல எழுத்துக்கள் இல்லாதிருப்பதும் கலை வளர்ச்சியைத் தகை செய்யும் இடர்களெனத் தமிழர் பழி தூற்றியதில்லை. பழம் தமிழ்க் கால முதல் வட சொற்களும் திசைச் சொற்களும் தமிழில் இன்றியமையாத விடத்து வழங்கி வந்திருக்கின்றன. ஆனால் பிற மொழிகள் தமிழுலகில் நுழைந்து பணி செய்ய நேருங்கால் அவைகள் தமிழியலுக்கு ஏற்ப உருமாறித் தொழில் புரிய வேண்டுமென்பது ஆன்றோர் வகுத்த தமிழ் மரபு.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே".

என்பது சூத்திரம். வடவெழுத்துக்களில் பல உரப்பியும், எடுத்தும், கனைத்தும் கூறவேண்டுதலின் அவை தமிழியலுக்கு முரண்படுதல் பற்றி அவ்வடவெழுத்துக்களை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் தமிழில் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட பிற்காலத்திலும் இவ்வியலுக்கு மாறுபடாவண்ணம் வடமொழி ஆக்கத்திற்குச் சில விதிகளும் நன்னூலார் வகுத்தனர். சங்ககால முதல் இதுகாறும் தோன்றிவரும் சிறந்த நூல்கள் யாவும் இம்மொழிமரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன.

இற்றை நாளில் தமிழை வளம்படுத்துவேமெனத் தலைப்படும் ஒரு சிலர் தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்திருப்பதாகவும், அவற்றை அகற்றுதல் மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாததெனவும் கூறுகின்றனர். நூல்வழக்கிலிருக்கும் மொழிகளையும் அவற்றின் எழுத்திலக்கணங்களையும் இக்கொள்கையினர் நடுநின்று ஆய்வரெனில், பிறமொழிகளிற்காணும் குறைபாடுகள் சொல்லிறந்தனவென்றும், தமிழ் மொழியில் அத்துணை குறைபாடுகள் இல்லை என்றும் காண்பர். (Lord Crower) என்ற ஆங்கிலப்புலவர் தம் மொழியின் எழுத்திலக்கணத்திற் காணப்பெறும் குறைகள் சிலவற்றைத் தொகுத்து, அவை புலனுமாறு இக்கவியில் விளக்குகின்றனர்:-

"In the English tongue we speak,
Why is "break" not rhymed with "freak"?
Well you tell me why it is true,
We say 'sew' but likewise 'Jew'?
"Beard" Sounds not the same as "heard"
"Cord" is different from "word"
And since 'pay' is rhymed with "say"
Why not 'paid' with 'said', I pray?
'Cow' is cow, but 'low' is low.
'Shoe' is never rhymed with 'foe'.
And in short it seems to me
Sound and letters disagree.

இன்னோரன்ன குறைபாடுகள் எண்ணிறந்தனவாய் மலிந்திருந்தும் ஆங்கில மொழியின் வளர்ச்சி குன்றினதாவென உன்னிப் பாருங்கள். கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் ஒருங்கே உடைய ஆங்கிலப் புலவர்கள் தமது எழுத்திலக்கணத்தைச் சீர்திருத்த முற்பட்டனரா? ஆங்கில எழுத்திலக்கணத்தில் சீர்திருத்தம்புரிய முற்பட்டவர் தாமும் எய்திய பயன் ஏதேனுமுளதா? MASON OLCOTT எனும் துரைமகனார் தமிழ் கற்பதில் ஆர்வந்தழைக்கின்றார்; தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கான அளவு தம் தமிழறிவை வளர்க்க ஒல்லாதெனக் கண்டு, தம் நிலைக்குத் தமிழைக் கொணர்வதே சாலுமென விழைந்து, இன்றியமையாதவை எனத் தாம் கண்ட சீர்திருத்தங்கள் சிலவற்றைச் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்துவிட்டனர். இந்திய நாடு முற்றுமே பயிலக்கூடியவாறு நாகரி, உருது போன்றதொரு பொது

வெழுத்தால் தமிழ் நூல்களை எழுதவேண்டுமெனவும், உலகெங்க ணும் பயிலுதற்பொருட்டு உரோமன் எழுத்தாலாவது, உலகப்பொது வான ஒலிக்குறி எழுத்தாலாவது (International Phonetic Alphabet) எழுதவேண்டுமெனவும் கருதுகின்றனர். இலக்கிய நூல் களிற் காணும் செந்தமிழ் வழக்கையொழித்துப் பேச்சு வழக்கிலுள்ள கொச்சை மொழியில் நூல்கள் எழுதப்பட வேண்டுமெனத் துணி கின்றனர். ஆகார, ஐகார, ஒகர, ஔகாரங்கள் ஏறிய மெய்யெழுத்துக் கள் அனைத்தையும் ஒருபடித்தாய் எழுதாது ணகர, னகர, றகர, லகர, ளகாரங்களுக்கு மட்டும் மாறுபட்ட குறியீடு எற்றுக்கோ வென வும், தங்கர, றன்னகரங்கள் மிகைபட்டவை எனவும் கூறுகின்றனர். அச்சுக் கோப்போரின் துன்பத்திற் கிரங்கி, மற்றுஞ் சிலர் இருநூற் றின் மேற்பட்ட எழுத்துக்களில் சிலவற்றை அகற்றிவிட விரும்புகின் றனர்; வேறு சிலர் 'f' என்னும் ஆங்கில எழுத்தையும் அதுபோன்று தமிழில் இல்லாத பிற மொழிகளிற் காணும் புதிய எழுத்துக்களையும் தமிழ் நெடுங்கணக்கில் சேர்க்க வேண்டுமெனவும் கருதுகின்றனர். இக்கூறிய கொள்கைகள் நாகரிக உலகில் எம்மொழியாளரும் கைக் கொள்ளாதவை என்பது வெளிப்படை. பிற மொழிகளுக்குரிய சிறப்பெழுத்துக்களை நாடொறும் தமிழ் நெடுங்கணக்கில் சேர்த்துக் கொள்ளுவதானல், என்றும் முற்றுப்பே றடையாததாய்த் தமிழ் நெடுங்கணக்கு, தன் பெயரினை யொப்ப நீள நீண்டுகொண்டே வரும். கன்னித் தமிழெனப் போற்றப் பெறும் உயர்தனிச் செம்மொழியின் எழில்நலமும் இயல்நலமுங் குன்றிக் கேடுற்றுத் தன்னுருவே மாறி விடும். தமிழின் எழுத்தியல், இப்போதுள்ளவாறே, பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்தும் மொழிப் பயிற்சிக்கோ, மொழி வளர்ச்சிக்கோ இது தடை செய்வ தெனக் கூறின ரில்லையே. வீரமா முனிவர், போப்பையர் ஆகிய அயல் நாட்டவரும் எளிதில் தமிழ்ப் புலமை எய்தி, தமிழரும் புகழத் தகும் இலக்கிய இலக்கண நூல்களை இயற்றித் தமிழ்மொழியின் மாட்சிகளை வியந்து போற்றி னரேயன்றி இக்கூறிய திருத்தங்கள் தேவையெனக் கருதின ரில்லை. ஆரியமும் தென்றமிழும் நன்குணர்ந்த நமது சமயகுரவர்கள் திரு முறைகளை அருளிச் செய்யவும், நமது ஞானகுரவர்கள் ஒப்புயர்வற்ற ஞானப் பனுவல்களை இயற்றவும் தமிழ்மொழி வளஞ்சுரக்கவில் லையா? வடகலையும் தென்கலையும் நிலைகண் டுணர்ந்த நச்சினார்க் கினியர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்கள் வட நூலார் கொள்கையில் அடிப்பட் டிருந்தும் தமிழ் மரபு இழுக்கா வண் ணம் உரை நூல்கள் இயற்றின ரன்றே! வடவெழுத்தைத் தமி ழில் பெய்து எழுதும் கொள்கை இன்றியமையாதென இவ்வுரையாசி ரியர் காணவில்லையே? தமிழன்பர் என்றும், தமிழ்ப் புலவர் என்றும் தமிழை வளம் பெறச் செய்வார்போலவும், தமிழுக்குப் புத்துயிர் அளிப்பார்போலவும், வாய்ப்பறை சாற்றி ஆங்கிலம் வட மொழி ஆகிய பிற மொழிகளில் தமக்குள்ள பெருமதிப்பினல் தமிழ் மொழி மேல் குறைகளை எறிட்டுக் கூறியும் தமிழ் மொழியின் சீரினை இழித்துக் கூறியும், மனம் போனவாறெல்லாம் சீர்திருத்தம் பேசத் தலைப்படு

இன்றவர் போலித் தமிழரல்லவா? ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் இக்கூறிய கொள்கைகளின்படி சீர்திருத்தங்களைப் புரிய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாது, மொழியியல் தானும் தாம் உணர்ந்தறியாதார் தமிழ் மொழியைத் திருத்துவோ மென்பது பேதை மதியன்றோ? இத்தமிழன்பர்களின் சீர்திருத்த முயற்சியால், தமிழன்னையின் எழில்நலம் மறுப்படாவண்ணம் பாது காப்பது தமிழரின் முதன்மையான கடன் என எண்ணுகின்றேன்.

கலைநூல்கள் தமிழில் எழுதப்பெறாதது பெருங் குறையென எல்லோராலும் கருதப்பெறுகிறது. கலை நூல்களைத் தேடுவோரில் லாதபடியால் அவை வெளி வரவில்லை என்பார் ஒரு சாரார். நூலில்லா மையால் பயில்வோரில்லை என்பர் மற்றொரு சாரார். தமிழில் எழுதப் பெறும் கலைநூல்களுக்கு உண்மையான தேவை நாட்டில் இருந்தால், நூல்கள் ஒன்று பலவாகத் தோன்றிவிடுமென்பது எனது நம்பிக்கை. இது எவ்வாறாயினும், கலைநூல்களை எழுதுவதற்கு ஏற்ற முறை யாது என்பது பற்றிப் பெரியதோர் ஆராய்ச்சி நிகழ்ந்து வருகின்றது. கலைநூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் படைப்பது எவ்வாறு? ஆங்கிலமாதிய மேனாட்டு நூல் களில் வழங்கும் சொற்களையே எடுத்துக்கொள்ளுவதா, வடசொற்க ளால் படைத்துக்கொள்ளுவதா, அல்லது தமிழ்ச்சொற்களால் ஆக் கிக்கொள்ளுவதா என்பதுபற்றி அறிஞர்கள் கலாம் நிகழ்த்துகின்ற னர். ஏற்ற தமிழ்ச்சொற்கள் நூலிலோ வழக்கிலோ கிடைக்கு மெனின் அவற்றைப் பயன்படுத்தவேண்டும்; இல்லாதவழி தமிழில் படைத்துக்கோடல் வேண்டும்; இதுவும் முடியாவிடில் பிறமொழிக் குறியீட்டுச் சொற்களைத் தமிழ்மரபிற் கேற்பத் திரித்து அமைத்துக் கோடல் வேண்டும். இதுவே பண்டையோர் கொண்ட முறை. பழைய இலக்கியங்களில் பயிலும் வடசொற்களும், திசைச்சொற் களும் பெரும்பான்மையாகத் தற்சம, தற்பவ மொழிகளாய்த் தமிழ் எழுத்தால் எழுதப்படுதலும், தமிழ்ச்சொற்களையே இணைத்து வேற்று மொழிச்சொல்லின் பொருளைத்தருமாறு படைத்துக்கொள்ளுதலும் வழக்கமாயிருந்து வந்திருக்கின்றன. பிறமொழியாளர்கள் கை யாளும் முறைகளும் இவையேயாகும். 'சாம்புநதம்' என்பதை 'நாவலம் பெயரிய பொலம்' என வழங்கினர். (நாவாய்) என்ற தமிழ்மொழியை Navy என யவனர் திரித்துக்கொண்டனர். இது போலவே ஆங்கிலேயரும் அரிசி, இஞ்சி என்பவற்றை rice, ginger என ஆக்கிக்கொண்டனர். கலைநூல்களிற் காணும் நுண்பொருள்களை யும், கருவிகளையும் உணர்த்துதற்கு நாள்தொறும் புதிது புதிதாகச் சொற்கள் மேனாட்டினரால் படைக்கப்படுகின்றன. இச்சொற்களை நுனித்து ஆய்ந்தால், தாம் சுட்டும் பொருளை விளக்கும் சொற்கள் மிகச்சில; அச்சொற்களில் பல, அவை உணர்த்தும் பொருளைக்கண்ட அறிஞரின் பெயராலாதல், இடுகுறிப்பெயராலாதல் ஆக்கப்பட் டிருத்தலைக் காணலாம். இங்ஙனம் ஆக்கப்பெறும் சொற்களை ஒரு மொழியினின்றும் பிறிதோர் மொழியில் வழங்குங்கால் தத்தம் மொழிக்குரிய எழுத்துக்களில் திரித்து எழுதிக்கொள்ளுதலும்,

சொற்பொருள் விளங்குமாறு தம்மொழியில் சொற்கள் படைத்துக் கொள்ளுதலும் மேனாட்டினர் கொள்ளும் முறைகளாம். சர்மனி நாட்டினர் கலைத்திறன் மிக்க நாடுகளில் முதலிடம்பெற்றுத் திகழ் பவர் என்பதை எவரும் மறுக்கத் துணியார். அறிவுநூற் பொருள் களைக் குறிப்பதற்கான சொற்களைப் பொருள் விளங்குமாறு சர்மனி யர் தம்மொழியில் ஆக்கிக்கொள்ளுகின்றனர். அவர்கள் மொழிவள மேனும் கலைத்திறமேனும் குன்றினதில்லை. இச்சீரிய முறையை ஏன் தமிழர் கொள்ளக்கூடாது? கலைநூல்களிற் காணும் நுண்பொருள் களைக் குறிப்பதற்குத் தமிழில் சொல்லாற்றலும் சொல்வளனும் இல்லை என்பார், தமது அறியாமையை மொழியின் மேலேற்றி ஏதம் புரிபவர் என விடுக்க. தருக்கநூல், அணி இலக்கணம், யோக நூல், ஞானநூல் முதலியவற்றில் வடசொற்கள் பலவற்றைத் தமிழில் செவ்வனே மொழிபெயர்த்திருக்கக் காணலாம்; பல வடசொற்க ளைத் தமிழ்ச் சொற்களாகத் திருத்தி அமைத்திருக்கவுங் காண லாம். இற்றை நாளிலோ, ஆங்கிலத்துறையில் கற்றுத் தேர்ந்த பட்டதாரிகள் பள்ளிச்சிறார்கள் பயிலுதற்பொருட்டு, மேனாட்டுக் கலைகளைப் பாடப் புத்தகங்களாகத் தமிழில் எழுதி வெளியிடுகின்ற னர். இந்நூலாசிரியர்களிற் பெரும்பாலர் தமிழ் நூற்பயிற்சி மிக மிகக் குறைந்தவர்; தமதுள்ளக் கருத்தைத் தெள்ளிதிற் கூற வாயில் லாது விழிப்பவர்; பொருள் விளக்கமற்ற, வாய்வழங்காத, சில வட சொற்களைக் கரடுமுரடாக முடைந்து குறியீட்டுச் சொற்களெனக் கருதித் தாம் எழுதும் கலைநூல்களில் அவற்றைப் பெய்து வெளியிடு கின்றனர். மாணவர்க்கும், ஆசிரியர்க்கும் இந்நூல்கள் விளைத்து வரும் ஏதங்கள் மிகப்பல. தமிழறிவு நிரம்பாத ஆசிரியர்கள் எழு தும் கலைநூல்களாலும், பள்ளிப் படிப்பினாலும் கலைவளர்ச்சி பெருகு மென்றும், நாட்டுமொழி வளம்பெறுமென்றும் நினைப்பது பேதமை யாகும். இம்மட்டோ! தமிழ் மொழியை வளப்படுத்தும் கருத் துடன், கலைநூல்களிற் காணும் நுண்பொருள்களைக் கூற, தமிழறிவு இல்லாத கலைவாணரின் உதவிகொண்டு அரசியலார் வெளியிட்டிருக் கும் குறியீட்டுச் சொற்களின் அட்டவணைகள் பல்லாற்றலும் பிழை மலிந்திருத்தலால் தமிழ்நாட்டின் நன்மதிப்பை இழந்து வழக்கற் றிருக்கின்றன. வடமொழியாளரும், அரசியலாரும் படைத்திருக் கும் குறியீட்டுச் சொற்கள் உலகர் அனைவர்க்கும் பொருள் விளங்கு மாறு அமைக்கப்பெற்றிருப்பதாகக் கருதலாகுமா? தமிழ்ச் சொற்க ளால் குறியீட்டு மொழிகளை ஆக்கிக்கொள்ளுவதால் விளையுங் கேடு தான் என்னை? திருவாளர் பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் மிகச்சிறந்த முறையில் கலைப்பொருள்களுக்கு ஏற்ற குறியீட்டுச் சொற்களைத் தமிழில் ஆக்கினரன்றே? திருவாளர் மறைமலையடிகள், திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A. M. L., திருவாளர் A. சீனிவாசாச்சாரியார் அவர்கள் B. A. L. T., திருவாளர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் முதலாயி னோர் விழுமிய நடையில் எழுதிவரும் உரைநூல்களையும், அன்னார் புதுக்கருத்துக்களை மிக எளிதாகத் தமிழில் எழுதுவதையும் கண்டும்,

தமிழ்மொழி வளங்குன்றியதெனப் பழிதூற்றும் வன்கண்ணர்களின் அறியாமைக்கு மிகவும் இரங்குகின்றேம்.

பள்ளியிற் பயில்வோர், ஆங்கிலமொழிந்த ஏனைய பாடங்களைத் தமிழில் கற்றுத்தேர்வது நாட்டிற்கும் நமக்கும் நலம்பயக்குமென்ற கொள்கை நாளடைவில் நிலைபெற்று வருகிறது. பள்ளியிறுதித் தேர்வி (S. S. L. C.) லுங்கூட கலைநூற்பொருள்பற்றிய வினுக்களுக்குத் தமிழில் விடை பகரலாமெனும் உரிமை வழங்கப்பெற்றுமிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே, கலைநூற்பயிற்சி தமிழில் நடப்பதே தமது முடிந்த நோக்கமென்று நடுத்தரத்தேர்வு (Intermediate) க்கான தருக்க நூலொன்றும், பிறநூல்களும் தமிழில் இயற்றத் தொடங்கி இருக்கின்றனர். என்ருலும், கல்லூரித் தலைவர்கட்கும், பல்கலைக்கழகத் தலைவர்கட்கும், கல்வித்துறைகளை ஆட்சிபுரியும் அரசியற்றலைவர்கட்கும், கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் இக்கொள்கையில் முழுநம்பிக்கையில்லை; உறுதியில்லை; ஊக்கமுமில்லை; தமிழில் கற்பிக்கும் ஆற்றலுமில்லை. இன்னபல காரணங்களால் தாய்மொழியில் கல்வியைக் கற்பித்தல் என்பது பேச்சளவில் இருக்கிறது. இன்னும் ஆட்சியில் வரவில்லை. தங்குற்றங் காணமாட்டாத ஆசிரியர், புதுவதான கலைப்பொருளைத் தமிழில் மொழிவதற்குச் சொல்வளமில்லையெனவும், கலைநூல்கள் எழுதுவாரில்லை யெனவும் பொய்க்கரிகூறி வீணே காலங்கழிக்கின்றனர். இப்பொருள்பற்றி, உசுமானிப் பல்கலைக் கழகப் பேரவையில் நவாபு மாடியார் சங்கு பகதூர் அவர்கள் M. A., 8—2—1934உயில் நிகழ்த்திய பேருரையைத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பல்காலும் படித்துத் தெளிவுறுவாராக. அப்பொன்னுரையின் சுருக்கம் வருமாறு.—எங்கள் மொழித்திறனில் முழு நம்பிக்கை வைத்தோம். புதுக் கலைகளின் கருத்தை உணர்த்த அயல்நாட்டு மொழியே இன்றியமையாத கருவி என்றும், தாய்மொழி இதற்கு ஏலாத கருவி என்றும் கொண்டிருந்த பழங்கொள்கையால் இந்தியர்கள் பழிக்கு ஆளானதுமன்றிக் கீழ்நிலையும் எய்தினர் எனக்கண்டோம். வேற்று மொழியைக் கற்றுப் புலமை பெறவும், அதன் வாயிலாய்க் கலையறிவு பெறவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளால் இக்கொள்கைக்கு அடிமை ஆகிறேம் என்பதை நன்கு உணர்ந்தோம். வேற்றுமொழியா லன்றிக் கலையறிவும், உயர்நிலையும் எய்தவொண்ணுது என்ற அடிமை எண்ணத்திஞல் நுண்மதி மழுங்கி, ஆயுந்திறனழிந்து, பாடப் புத்தகங்களை உருவேற்றி ஒப்புவிக்கும் கருவிகளாயினேம் எனத் தெளிந்தோம். தாய்மொழி தாழ்ந்த தரத்தது, கலைக் கருத்துக்களைத் தன் கைப்படுத்தவோ பிறர் உணருமாறு கூறவோ முடியாதது என்ற எண்ணங்கள் மனிதனின் ஆய்புலத்தையும், தன்முயற்சியையும் மழுங்கச் செய்யும் மனநிலையை விளைத்துவிட்டன. தாய்மொழி இழிதகவுடையதெனும் கொள்கையை மறுக்கத் துணிந்தவர் சென்ற ஒரு நூற்றூண்டாக வெளி வரவில்லை. இந்திய மக்கள் கல்வியில் தேர்ச்சியடைதற்கு ஆங்கிலமே ஏற்ற கருவியென மக்காலே துரைமகனுர் அறிக்கை

விடுத்த காலந்தொட்டு, அனைவர்க்கும் தாய்மொழியில் நம்பிக்கை ஒழிந்துவிட்டது. எமது தாய் மொழியில் கல்வி வழங்குவம் எனப் பல்கலைக் கழகம் கூறிய ஞான்று பல்வகைத்தான எதிர்ப்புக்கள் இங்குத் தோன்றின. சிசுக் கொலைபுரிவோர் சிலர் கழகத்தின் கழுத்தை உடனே முறித்துவிட எண்ணினர். சிலர் சொல்வளம் நிரம்பாத இந்துத்தானி மொழி புதுக் கருத்துக்களைக் கூற முடியாது தடுமாற்றமுறுமெனவும், அம்மொழியைக் கருவியாகக் கொண்டு கற்பிக்க முயலும் கலைக் கழகமும் உருப்படாது மாய்ந்தொழியுமெனவும் கூறினர்; மற்றுஞ் சிலர் ஆங்கில நாட்டிலுள்ள கலைக் கழகங்களின் நன்மதிப்பைப் பெறமாட்டாதெனநினைத்தனர்; யானோ, இக்கலைக் கழகத்தாரின் புதுக் கொள்கையில் முழு நம்பிக்கை வைத்தவன்; கழகந் தொடங்கியவர்களின் மதி நுட்பத்தை மிகவும் மெச்சினேன்; துணிபுடன் செயல்புரிந்ததை மகிழ்ச்சியுடன் பாராட்டினேன். தாய்மொழிப் பயிற்சியில் தமக்குள்ள குறைவினை உன்னி, சொல்லாற்றல் இல்லையே எனக் கணக்காயர் முதலில் மயங்கினர். இதுபோது கழகந் தொடங்கிப் பத்து ஆண்டுகள் ஆயின. இந்துத்தானி மொழி புதுத் தேவைகளுக்கேற்றவாறு விளங்குவதையும், கலை நூற்பொருள்களை எளிதே கூறுதற்கு ஏற்ற கருவியாய் இருப்பதையும், உள்ளக் கருத்துக்களை முட்டின்றி மொழிவதற்குத் தம் சொல்வளம் பல்கியதையும் அக்கணக்காயரே கண்டு இன்புறுகின்றனர். இலக்கியங்களும், கணிதமாகிய கலைகளும் இயல்பிலே வந்து தாய்மொழியில் இசைவுடன் அமைந்துவிட்டன. சுருங்கக் கூறின், கழகந் தோன்றிய காலத்தே பலர் உள்ளத்தும் விளைந்த ஐயப்பாடுகள் யாவும் அகன்றொழிந்தன. புதுக் கலைகள் எல்லாம் மிக எளிதில் தாய்மொழியிலே கற்பிக்கப்படுகின்றன. இக்கழகத்தே தேர்ச்சி பெறுபவர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள கலைக் கழகங்களின் தேர்வுகட்கு எவ்வாற்றானும் தாழவில்லையென மதிக்கப் பெறுகின்றனர். நீதிக் கலை, மருத்துவக் கலை, சிற்பக் கலை, உழவுக் கலை ஆகிய தொழிற்கலைக் கல்லூரிகளும் சீரிய முறையிலே வளர்க்கப்பெறுகின்றன.''

செயற்கரிய கருமமெனத் தமிழர் கருதும் செயல்களை, உசுமானிக் கலைக் கழகத்தினர் பத்தாண்டுகளில் மிக எளிதில் இயற்றியதன் பொருட்டென்னை? உண்மையான மொழிப் பற்றும், தன்னம்பிக்கையும், எண்ணிய கருமத்தை எவ்வாற்றானும் இயற்றுவேமெனும் மனத் திண்மையுமல்லவா? தமிழன்பர் என மகுடமிட்டுக்கொள்பவரிடத்து இத்தகைய பெற்றிமைகள் காணப்படுகின்றனவா? இவர் மாட்டுத் தன்னம்பிக்கையில்லை; தாய்மொழியின் எழில்நலங்களையும், சொற்சுவை, பொருட்சுவைகளையும் காண்பதற்குரிய தமிழறிவில்லை; ஆதலால் புதுக் கருத்துக்களைப் பேசுதற்குச் சொல்லில்லையெனவும், எழுதுதற்கு எழுத்தில்லையெனவும் பழி தூற்றி அயல்மொழிகட்கு அடிமைகளாயிருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் கல்வித்துறையிலும் அரசியல் நெறியிலும் உயர்பதவியிலிருப்பவர்கள் ஆங்கில மொழியில் மதிப்பும் வட மொழியில் பற்றும் உடையவர்களாய் அவற்றை வளர்ப்பதில் கருத்துடையவர்களாயிருக்கின்றனர். சில

காலமாய் நிகழ்ந்துவரும் நாட்டு மொழிக் கிளர்ச்சியின் பலனாய், சென்னைப் பல்கலைக் கழகத்தினர் F.A., B.A. தேர்வுகட்குத் தமிழைக் கட்டாயப் பாடமாக வைத்தும், தமிழாராய்ச்சிக் கழகம் நிறுவியும், தமிழகராதி வெளியிட்டும், தமிழில் B. A. Honours ஏற்படுத்தத் தீர்மானித்தும், சிறந்த தமிழ்ப் பணி ஆற்றியதாகக் கருதுகின்றனர். சற்றே ஆராய்ந்து பார்த்தால் இவையெல்லாம் வெளிமயக்கு என்பது தேற்றமாகும். B.A. தமிழ்த் தேர்விற்கு வசதி தரும் உயர் தரக் கல்லூரி சென்னை நகரத்தில் ஒன்றுதானுமில்லை; வெளி நகரங்களிற் கும்பகோணம் தவிர்ந்த பிறவிடங்களில் இல்லை. தமிழ் வித்துவான் தேர்விற்கு வசதி தரும் கல்லூரி திருவையாறு அல்லாத பிறவிடங்களில் இல்லை. ஆங்கில மொழியையும் வட மொழியையும் வளர்க்காத கல்லூரியும், பல்கலைக் கழகமுமோ சென்னை மாகாணத்தில் இல்லவே இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தினர் முடிவு செய்த வண்ணம் தமிழ் Honours வகுப்புகள் என்றைக்கேனும் உருவாகுமோவென ஐயுறவேண்டியிருக்கின்றது. சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் வெளியிட்டிருக்கும் நூல்களையும், அவர்கள் செலவிட்ட தொகைகளையும் ஒப்புநோக்குமிடத்து, கழகத்தின் வேலை நன்மதிப்பிற்குரியதாயில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தொடங்கிய தமிழ் வேலை சென்னைக் கழகத்து வேலையினும் சிறிதளவு சிறந்ததெனக் கூறலாம். தமிழ் மொழிக்குத் தனித்தலைமை கொடுத்துச் சீரிய முறையில் வளர்க்கும் கடப்பாடுடைய இக்கழகத்தும் ஏனைய கழகங்களையொப்பவே தமிழுக்கு ஓர் ஒதுக்கிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கழகங்களில் செய்யும் வேலைகளை யெல்லாம் செய்யத்தலைப்பட்டுப் பண மில்லாமை கண்டு, தமிழைச் சிறந்த முறையில் பேண வழியில்லையென மயங்குகின்றனர். தமிழில் கலைநூல்கள் எழுதுதற்குப் போதிய அளவு தொகைகள் தருவதில்லை; தமிழ் ஆராய்ச்சி வேலைக்கும், தமிழ் Honours தேர்வுக்கும், தமிழ் வித்துவான் படிப்பிற்கும் வருகின்ற மாணவர்களை ஊக்குதற் பொருட்டுப் போதிய அளவு உதவிச் சம்பளங்கள் கொடுப்பதில்லை. தமிழ்நாட்டில் அருகிக் காணப்பெறும் நல்லாசிரியர்களைத் தேடிக் கொணர்ந்து பேணியும் போற்றியும் வைத்துக்கொள்ளுவதில்லை; வடமொழிப் பிரிவில் பல்வகைத்தாய சிரோமணி வகுப்புக்களை நிறுவத் துணிந்தவர்கள், தமிழில் வித்துவான் வகுப்பு மட்டும் வைத்து சிரோமணிப் பிரிவுகளை யொத்த தமிழ்ப்பிரிவுகள் ஏற்படுத்தாதிருக்கின்றனர். இசைக் கல்லூரியில் தமிழ்க்கல்விக்கு இடந்தராமலும், தமிழிசையை வளர்ப்பதற்குரிய வழிகளை அமைக்காமலும், தமிழ்ப்பற்றுடைய மாணவர்களைச் சேர்க்காமலும் வன்கண்மை புரிகின்றனர். இப்பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் கழகத்தில், தமிழ் மொழிக்கும் இப்பல்கலைக் கழகத்திற்கும் சிறந்த தொடர்பு இருப்பதாகச் சட்டத்தில் புலனாகவில்லையே என வாது புரிபவர்களைச் சேர்த்திருப்பதால் அவர்களால் விளையும் தடுமாற்றங்கட்கு அளவுதானுமில்லை. பல்கலைக் கழகங்களில் உயர்பதவிகளில் இருப்பவர்களில் பெரும்பாலர் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் இல்லாத

வர்கள். ஆதலால், இக்கழகங்களின் அமைப்பு மாறினாலன்றித் தமிழ்மொழி கீழ்நிலையில் வைக்கப்படுமென்பது ஒருதலை. ஆட்சிக் கழகத்திலும் (Syndicate), கலைக்குழுவிலும் (Academic Council) இடம் பெறுபவர் தமிழ்ப்பற்றில்லாத மேனாட்டுக் கலையறிஞர். இவர்களால் தமிழ் வளர்க்கப்பெறுமென எண்ணுவது ஏமாற்றத்திற்கிடமாகும்.

வங்காளியர், மராட்டியர், ஆந்திரர் ஆதிய இந்தியர்கள் மிகுந்த மொழிப்பற்றுடையவர்களாய்க் காணப்பெறுகின்றனர். ஆங்கிலத்திலும், மேனாட்டுக் கலைகளிலும் புலமை நிரம்பியவர்களும் தம் தாய் மொழியில் பற்றுடையராய்த் திகழ்கின்றனர். செல்வம் படைத்தவர் மொழிவளர்ச்சிக்கான கருமங்களிற் செலவிடுதற்பொருட்டுப் பெருந்தொகைகளைத் தருகின்றனர். தாம் கற்ற கலைநூற் பொருள்களைத் தம்மவர் எளிதில் கற்பதற்குரிய நூல்களைத் தம் தாய் மொழியில் இயற்றுகின்றனர். தமிழ் நாட்டினர் தாய்மொழி வளர்ச்சிக்காக யாது செய்கின்றனர்? தமிழ்ப் பற்றுடையவர்கள் ஒரு சிலர் ஆங்காங்கு நடத்திவருகிற தமிழ்க் கலாசாலைகளையன்றி, சிறந்த முறையில் விரிவான ஏற்பாடுகளுடன் நடத்தப்பெறும் உயர்தரத் தமிழ்க் கல்லூரி ஒன்றேனும் தமிழ் நாட்டின் எல்லைக்குள் காண்பதற்கில்லை. தமிழ் வளர்ச்சிக்குச் செய்யப்பெறும் சிறுமுயற்சிகள் நாடெங்கும் சிதறிக் கிடக்கின்றமையாலும், இவை சிறந்த குறிக்கோள் ஒன்றனை எய்தும் கருத்துடன் நடத்தப்பெறாமையாலும் மதிக்கத்தக்கதான பலன் இவற்றால் விளைவதில்லை. தமிழ் நாட்டிலுள்ள குறுநில மன்னர், நிலக்கிழவர்கள், செல்வர்கள் ஆதிய பெருமக்களில் பெரும்பாலர் தமிழ்மொழியிடத்து அன்பில்லாதிருக்கின்றனர்; செவியிற் சுவையுணரமாட்டாது, வாயுணர்வில் திளைப்பவராயிருக்கின்றனர். இவர்களுடைய அரண்வாய்ந்த மாளிகைகளில் கண் முதலிய புலன்களைக் கவரும் பொருள்கள் சேமித்திருப்பதன்றி, அறிவையும் மனதையும் கவரும் தமிழ் நூல்களைக் காண்பது அரிதினும் அரிதாகின்றது. நாட்டின் தலைவர்களது நிலை இதுவானால், பொது மக்களின் நிலைமையைப் பேசவும் வேண்டுமோ? சினிமா, நாடகமாதிய காட்சிகளும், கிராமபோன் பாடல்களும், 'காபி' ஆதிய உண்டாட்டுக்களும், சமயவாதங்களும், சாதிக்கலகங்களும், அரசியற் போர்களும், இன்னபலவும் அளவிறந்த இன்னல்களை விளைப்பனவாயிருந்தும், அவைகளே மக்களின் உள்ளத்தை ஈர்த்து அயராது ஊக்கிவருகின்றன. நல்ல நூல்களைக் கற்பதும், கற்றவர்கள் வாயிலாய்க் கேட்பதும் வழக்காறற்று வருகின்றன. தமிழ் நாட்டின் நகரங்களிலுள்ள புத்தகக் கடைகளில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் பாடப்புத்தகங்களையன்றி நல்ல தமிழ்நூல்களை விற்பது அரிதாகிவிட்டது. செய்தித் தாள்களையும், நொடிப்பும், நகையும் மலிந்த விகடத் தாள்களையும், காதல், களவு முதலிய சிறுமைகளை விளங்கக் கூறி அறியா மாக்களை இன்புறுத்தும் நாவல்களையுமே தமிழ் மக்கள் பேணுகின்றனர். ஞானசாகரம், ஞாயிறு, செந்தமிழ்ச் செல்வி, கலாநிலயம், தமிழ்ப் பொழில் போன்ற மாதத் தாள்களை ஆத

ரிப்பார் மிக மிகக் குறைந்து வருகின்றனர். சுருங்கக் கூறின், தமிழரிற் பெரும்பாலர் சிறு தொழில்களையும் சின்னீரவாகிய இன்பத்தினையும் நாடுபவர்களாய், வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள்களை அறியாதவர்களாய்க் கீழ்நிலையை எய்தி இருக்கின்றனர். உலகர் போற்றிப்புகழும் உச்ச நிலையில் இருந்த தமிழ் மக்கள் ஆற்றல் குன்றி அறிவிழந்து, கல்லாமாக்களாய் ஆனதன்பொருட்டு என்னை? தாய் மொழிப் பயிற்சியை நெகிழவிட்டோம்; தமிழ் மூதறிஞர் கூறிய உறுதிப்பொருள்களை மறந்தோம்; அன்னியரின் நடைஉடை பாவனைகட்கும் மொழிகட்கும் அடிமைப் பட்டோம். இதனாலன்றோ "கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்விமுற்ற—வல்லாருமில்லையவை வல்லார் அல்லாருமில்லை" எனக் கூறமுடியாது நம்மவரில் 100-க்கு 95 பேர்கள் கல்லாமாந்தர் எனக் கணக்கிடலாயிற்று.

இக்குறைகளைத் தீர்ப்பதற்குரிய வழிதுறைகளை அமைப்பது கடன் எனக்கண்ட தமிழறிஞர், மொழி வளர்ச்சிக்கு அடிப்படையான கருமங்கள் எவை யென அறுதியிட்டு, அவற்றுள் சிலவற்றையேனும் நாமே நிறைவேற்ற வேண்டுமெனும் மனவுறுதியுடன் முடிபுகள் செய்யவேண்டும். தீர்மானிக்கப்படும் முடிபுகளை ஆட்சியில் கொணர்ந்து காரியங்களை முட்டின்றி முடிப்பதற்குரியதோர் சங்கத்தை நிறுவவேண்டும். உண்மைத் தமிழ்ப்பற்றும், பிறருடன் தோழமைகொண் டுழைக்கும் ஒருமைப்பாடும் உடைய தமிழன்பர்களையே அச்சங்கத்தில் உறுப்பினராய்ச் சேர்க்கவேண்டும். அறிவுக்கலை, அழகுக்கலை, தொழிற்கலை ஆகிய கலைகள் அனைத்தையும் செவ்விய தமிழில் தக்கார் துணைகொண்டு இயற்றவேண்டும்; இவ்வாறு இயற்றப்படும் நூல்களைப் பயில்வதற்குத் தொடக்கக் கல்லூரிகளையும், நடுத்தரக் கல்லூரிகளையும், உயர்தரக் கல்லூரிகளையும் நாடெங்கும் நிறுவவேண்டும்; நல்ல நூல்நிலையங்களை நாட்டவும், பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்தவும் மிக மிக வசதிகள் இயற்றவேண்டும். இச்சங்கத்தின் கொள்கைகளை ஆங்காங்கு பரவச்செய்வது தமது தலையாய கடமை எனக்கருதித் தமிழ்ப்பண்டிதர் அனைவரும் இத்தமிழ்ப் பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் யாவும் ஒரு நோக்குடன் செயல் புரியும் பொருட்டு அவற்றை இச்சங்கத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும். தமிழ்ச் சங்கங்கள், ஆண்டு விழாக்கள் நடத்துவதோடமையாது, இயல்பிற்கேற்றபடி தமிழ்க் கலாசாலையும், நூல் நிலையமும் நடத்தவும், சார்ந்துள்ள மக்கள் காவிய நலன்களை நுகரவும், கலை அறிவில் வேட்கையுறவும் வசதிகள் அமைக்கவும், தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களை அவ்வப்போது வாங்கவும் முன்வர வேண்டும். அரசியலாரின் துணையையோ, ஆங்கிலக் கல்லூரிகளின் ஆதரவையோ எதிர்பாராது, தமது வாழ்க்கையை நன்மதிப்புடன் நடத்திக்கொள்ளுமாறு மருத்துவம், சோதிடம், இசை, நாடகம் போன்ற சில தொழிற்கலைகளையும் வித்துவான் படிப்பிற்குப் பாடமாக அமைத்துச் சிறந்த முறையில் உயர்தரக் கல்லூரி நாட்டவேண்டும். இவ்வாறன்றி, தமிழ் இலக்கிய இலக்கணங்களை மட்டும் பயின்றால் எவ்வண்ணம் B, A முதலிய பட்டதாரிகள்

பிழைக்கும் வழி தெரியாது, வேலையில்லாது விழிக்கின்றார்களோ அவ்வண்ணமே தமிழில் புலமை பெறுவோரும் தவிக்க நேரும். இசைத்தமிழ், நாடகத்தமிழ், மருத்துவக்கலை, ஓவியக்கலை ஆதிய கவின்கலைகளில் தமிழ்ப்புலவர்கள் திறனடைந்தால் இக்கலைகள் வளர்ந்தோங்கும்; தமிழ்ப்புலவர் வளம்பெறுவர்; நாடும் நலனுறும். இது தமிழ்ப்பித்தனுடைய வெறுங்கனவன்று. உண்மையில் தமிழ்ப் பற்றுடைய அறிஞர்கள் ஒருங்குசேர்ந்து, ஆங்காங்குள்ள அன்பர்களின் துணைகொண்டு சிறிது சிறிதாகப் பொருள் ஈட்டித் தமிழ்த் தொண்டுபுரியத் தலைப்பட்டால் இவை மிக எளிதில் நிறைவேறும். தன்னம்பிக்கையும், உலையாத ஊக்கமும், தளராத முயற்சியும், கருத்து வேறுபாடு விளையக்கூடிய கருமங்களினின்றும் விலகுதலும், ஒருமைப்பாடும் கொண்டு உழைப்பவர் இத்தமிழ்த்தொண்டை மேற்கொள்ளவேண்டும். தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலக் கல்லூரிகள் எத்தனை, வடமொழிக் கல்லூரிகள் எத்தனை வளனுற விளங்குகின்றன! இதுகாலை அரசியற் பித்தினால் இந்திமொழியும் இந்திப் பிரசாரகரும் தமிழ்நாட்டில் பெற்றிருக்கும் ஆக்கத்தின் பொருட்டு என்ன? பிறமொழிகள் வளர்தற்கும், தமிழ்மொழி வளங்குன்றுதற்கும் காரணமாவது தமிழரின் முயற்றின்மையே யாகும். அரசியலாரையும், நாட்டின் தலைவர்களையும், மடங்களின் தலைவர்களையும், பெருஞ்செல்வரையும் பழிதூற்றுவதில் பயனில்லை.

‘ உழப்பின் வாரா வுறுதிகளுளவோ
கழப்பின் வாராக் கையறவுளவோ. ’

என்ற பொய்யாமொழியினைக் கடைப்பிடித்துத் தமிழறிஞர் ஊக்கத்துடன் முயலவேண்டும்.

தமிழ்நாட்டின் நிலை பல்லாற்றானும் தளர்வுற்றிருக்கின்றது. நூற்றுக்கணக்கான ஆங்கிலக் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக் கழகங்களும் தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளிருந்தும், தமிழரிற் பெரும்பாலர் கல்லா மாக்களெனக் கருதப்படுகின்றனர். ஆங்கிலக் கல்லூரிகளிலிருந்து கற்றுத்தேறி வெளி வருபவர் புதுக்கொள்கைகட்கு அடிப்பட்டு, பிறர்மாட்டு அன்பும் அருளும் கொண்டு தொண்டு புரியுமாறறியாத ஊமராய்த் தனிச்சாதியினரா யிருக்கின்றனர். அறியாமை அகலவும், நாடு நலஞ்சிறக்கவும் தமிழ்க்கல்வியே சிறந்த கருவி. தமிழ்மொழியின் ஆக்கம் பெருகுதற்குரிய வழிகளை நாடித் தமிழறிஞர் நாட்டைப் புரப்பாராக.

“ எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். ”

நலம்

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

க. "சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்" ஒன்று நிறுவவேண்டு மென்றும், அதனை (Government of India Act 21 of 1860) இந்திய அரசியலார் 1860 இருபத்தோராவது சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமென்றும், அதற்கான விதிகளை ஒப்புக்கொள்வதாக வும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

உ. "இச்சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாட்டின் மிகுதித் தொகை சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் முதற் பொருளாகு மென்றும், தமிழ்நூற் காட்சி நிலையத்திற்கு வந்துள்ள நூல்களில் சங்கத்திற்கெனத் தரப்பெற்றன சங்கநூல் நிலையத்திற் சேர்க்கப்பெற வேண்டுமெனவும் இம்மாநாடு தீர்மானிக்கிறது."

ங. "ஆங்கில ஆசிரியருக்குள்ள தகுதிகளும் பொறுப்புக்களும் தமிழாசிரியர்கட்கும் இருத்தலினாலே, அவ்வப் பள்ளிக்கூடங்களி லுள்ள ஆங்கில ஆசிரியருக்குத் தருவது போலச் சம்பளம் தமிழாசிரி யர்கட்கும் தரல்வேண்டும் என்று அரசியற் றலைவர்களையும், கல்லூரி நடத்துகிற செல்வர்களையும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது."

ச "உலக முதன் மொழியாகவும், பலதுறைக் கல்விகளும் அமைந்துள்ளதாகவும் உள்ள தமிழ்மொழியை அடிமைமொழி எனப் பொருள்படும்படி "Vernacular" என்று சொல்லாமல் "தாய் மொழி "Mother tongue" என்று கூறவேண்டும் எனப் பல்கலைக் கழகத்தாரையும் அரசியலாரையும் இம்மாநாடு வேண்டிக்கொள் கிறது."

ரு. "ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் தகுதிவாய்ந்த தமிழா சிரியர்களை அமர்த்தல் வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது."

சு. "மக்களிடை அறிவை வளர்க்கச் சுற்றுநூல்நிலையங்கள் பல இடங்களிலும் தொடங்கும்படி நாட்டாண்மைக் கழகத்தாரையும் தமிழ்ச் சங்கங்களையும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது."

எ. "நூன்மதிப்புக் கழகத்தா (Text Book Committee) ருடைய ஒப்பம் பெற்ற நூல்களிற் பல பிழை மலிந்திருப்பதைக் கண்டு இம்மாநாடு வருந்துகின்றது."

அ. "ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இருப்பதுபோல தமிழி லும் துணைமொழி யில்லாமல் B. A., M. A., பட்டத்திற்குத் தமிழி லேயே தேர்வு ஏற்படுத்த வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது."

கூ. "கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் ஆங் கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழிற் கற்பித்தல் வேண்டு மென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது."

ம. "பள்ளி இறுதித் தேர்வு (S. S. L. C), நடுத்தேர்வு (Intermediate), கல்லூரித் தேர்வு (B. A.) ஆகிய தேர்வுகளில்

தமிழை எடுத்துக்கொண்ட மாணவர் அதே மொழியை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளலாமென விதிக்க வேண்டுமென்று பள்ளி இறுதிக் கழகத்தாரை (S. S. L. C. Board) யும், பல்கலைக் கழகத் தாரையும் இம்மாநாடு வேண்டுகிறது."

கக. "தமிழ்மொழியிற் பல்பொருள் விளக்க அகராதி (Encyclopaedia) இன்மையின் அக்குறையை நீக்கத் தமிழறிஞர் முற்படுதல் வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது."

கஉ. "நாட்டின் உண்மை வரலாற்றை விளக்குகின்ற கல் வெட்டுக்களை ஆராய்ச்சி செய்வதற்கு அதிற் பழக்கமுள்ள தமிழ்ப் புலமை மிக்கார்களையே ஏற்படுத்தும்படிக்கும், அவற்றைத் தாமே ஆராய்பவர்களுக்குப் பணஉதவி செய்யும்படிக்கும் இது வரையில் வெளிவராத கல்வெட்டுக்களை விரைவில் வெளியிடும் படிக்கும் அரசியலாரை இம்மாநாடு வேண்டுகிறது."

கங. "தமிழ்ப் பெயர்கள் பிறமொழிப் பெயர்களாக மாற்றப் பட்டிருப்பதை உண்மைப் பெயராக வழக்கத்திற் கொண்டுவரவேண் டும் ஏற்பாடு செய்யக் கீழ்க்கண்டவர்களை ஒரு உட்கழகமாக, பிறரை யும் சேர்த்துக்கொள்ளும் உரிமையுடன், இம்மாநாடு ஏற்படுத்து கிறது.

க. திரு. த. வே. உமாமகேசுரன் பிள்ளையவர்கள் B.A., B.L.
உ. ,, வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.
ங. ,, இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளையவர்கள்.
ச. ,, க. ப. சந்தோஷம் அவர்கள் B.A., L.T.
ரு. ,, செ. தெ. நாயகம் அவர்கள்.

கச. "தமிழ் நாட்டில் நடைபெறும் விழாக்களிலும், பிற திரு மணம் முதலிய நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப் பாடல்களே பாடுமாறு ஏற் பாடு செய்யத் தமிழ்ப் பெருமக்களை இம்மகாநாடு வேண்டுகிறது."

கரு. "அரசியலார் வெளியிட்டுள்ள அட்டவணைகளில் நூற் றுக்கு எண்பத்தினான்கு சொற்கள் வடமொழியா யிருத்தலால், மேல் நாட்டுக் கலைச்சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை (Tamil Equivalents to Scientific Terms) ஆக்குவதில் ஊசுமானியா முதலிய பல்கலைக் கழகத்தார் செய்துள்ள செயல்களைத் தெரிந்து கொண்டு ஆக்கித் தரும்படி பின்வரும் உட்கழகத்தை இம்மாநாடு அமைக்கிறது. அக்கழகம் தக்காரைச் சேர்த்துக்கொள்ளும் உரிமை யுடையது."

திருவாளர்கள் (க) கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A.,L.T., (உ) T. S. வேலாயுதம் பிள்ளையவர்கள் B.A., L.T., (ங) A. சீனி வாசாசாரியாரவர்கள் B.A., L.T., (ச) சாமி. விபுலானந்தர் அவர்கள் B.S.C., (ரு) M. சோமசுந்தரம் அவர்கள் M.A., L.T., (சு) க. ப. சந்தோஷமவர்கள் B.A., L.T., (எ) அலர்மேல் மங்கைத் தாயாரம்மா ளவர்கள் M.L.C., (அ) சாமி. விருதை. சிவஞான யோகியவர்கள், (கூ) தி. இலக்குமணப் பிள்ளையவர்கள் B.A.

ஆராய்ச்சிப் பகுதி-Research

ஆரியர் நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்—
காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

(முன் ௧௨௨-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டு மக்களின் நாகரிக முதிர்ச்சியை யளந்தறிவதற்கு அம்மக்களின் "மட்டு, மரியாதை"களே சிறந்த கருவிகளாகும். இம் "மட்டு, மரியாதை" என்பன ஒருவருடனொருவர் உரையாடுவதிலுங்கூட பின்பற்றற் குரியனவாம். பலர் முன்னிலையில் சில சொற்களைக் கூறலாகாதென ஒரு நியதியுண்டு. அச்சொற்களெல்லாம் அவையஞ்சு கிளவிகளாம். இத்தகைய சொற்களை வழக்காற்றிற் பயன்படுத்துவதை அளவுகோலாகக் கொண்டு நாம் திராவிடர் நாகரிகத்தை அளக்கப் புகின் அவ்வளவு கோலுக்கு அதன்கண் வேலையே யில்லை என்பது புலனும். ஆரியர் நாகரிகத்தை அளக்கப் புகினே அவையஞ்சுகிளவியளவுகோல் மீண்டும் மீண்டும் பன்முறை அளக்கப் பயன்படுவதைக் காணலாம். ஆரியர்தம் நூல்களிலும் உரையாடலிலும் வழங்கும் இத்தகைய அருவருக்கத்தக்க சொற்களுக்கு அளவே இல்லை. பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தொடங்கி இன்றளவும் எழுதப்பட்டு வெளிவந்துள்ள ஒவ்வொரு தமிழ் இலக்கண நூலிலும் அருவருக்கத்தக்க மொழிகளைப் பயன்படுத்தக் கூடாதெனக் கண்டித்து அறுதியிட்டிருப்பதையும், இன்றியமையாது பயன்படுத்தவேண்டி நேரிடுங்கால் எவ்வாறு இடக்கர் அடக்கி மொழிய வேண்டும் என விதித்திருப்பதையும் நன்கு காணலாம். வேறெம் மொழிக்குரிய இலக்கண நூலிலும் இத்தகைய தொரு விலக்கு இருப்பதாக நானறிந்த வரையிற் கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

எழுத்தறியாத திராவிட நாட்டுப்புறத்தான் ஒருவன்கூட, இயல்பாகவே திராவிட நாகரிகத்திற்குரிய "மட்டு மரியாதை" என்ற கட்டுப்பாட்டினுட் பழக்கப்பட்டவனாதலால், தெலுங்கிலோ, தமிழிலோ, மலையாளத்திலோ, துளுவிலோ இணைவிழைச்சு குறித்த சொற்களையும் அவைபோன்ற சொலற் கொணச் சொற்களையும், சினமூட்டப்பட்டோ மற்ற எக்காரணத்தினாலோ தன் நிலை யிழந்திருந்தாலொழிய, கூறவே மாட்டான். ஆனால் வடமொழியில் வேதங்கள்முதல் தோன்றியுள்ள நூல்களிலோ ஆரியக் கவிஞர்கள் "சிருங்கார ரசம்" என்ற பெயரால் திரா

விடர்கள் காதுகள் புளித்துப்போகுமளவிற்கு அளவு வரையற்ற அருவருக்கத்தக்க இடக்கரான மொழிகளை வாரியிறைத்துள்ளனர்.

"எல்லோரும், 'ஊத்தைக் குழியிலே மண்ணெடுத்து உதிரப் புனலிலே உண்டை சேர்த்து'ப் பிறந்தவர்கள் தாமே! அவ்வாறிருக்க உண்மையான சொற்களை மொழிவதில் அருவருப்பென்ன! மறைப்பென்ன?" என்றுவினவுதல் கூடும். உண்மையே; அவ்வாறு எல்லோரும் பிறந்தவர்கள்தாம் என்பதை மறைக்கவில்லை; மறுக்கவுமில்லை. ஆனால் அவ்வாறு பிறந்ததனாலேயே அப்பிறத்தற்குரிய உறுப்புகளையும் செய்கைகளையும் பறைசாற்றித் திரியலாம் என்று கூறுவதையே மறுக்கிறோம். அஃது "மரியாதை" யற்ற ஒழுக்கமாகும். அருவருக்கத்தக்கவற்றை ஒதுக்குவதனாலேயே மக்கள் மாக்களினும் வேறுபட்டு மேம்பட்டவர்களாகின்றனர். யாகம் என்ற பெயரால் ஆரியர்களாற் செய்யப்படும் 24 வகைப்பட்ட பௌண்டரீக யாகங்கள் ஒழுக்கமும் நாகரிகமும் உடைய எம்மக்களாலாவது கையாளத்தக்கனவா? யாகத்திற்காகப் பலியிடப்படும் ஆடு, மாடு, குதிரை, மான் போன்ற விலங்குகளை யாகத்திற்கு 'அதிதெய்வமான' இந்திரனாகவே கருதி அவ்விலங்கினுடன் யாகம் இயற்றுவோனின் மனைவி இரவெல்லாம் துயில் கொள்ள வேண்டும் என்று விதித்துள்ள ஆரிய நாகரிக முறையின் ஏற்றந்தான் என்னே! திராவிடர்தம் நாகரிக நிலை குலைந்து சீர் கேடுற்றிருக்கும் இக்காலத்திற் கூட திராவிடப் புலவர்கள் இணைவிழைச்சிற்கான சொற்களைப் பயன்படுத்த நேருங்கால் ஒருபடித்தாக அவற்றை வடமொழிச் சொற்களாகவே குறித்திருப்பதைக் காணலாம். தமிழ்மொழியின் தூய்மையையும் பெருமையையும் அவர்கள் மாசுபடுத்தத் துணியவில்லை.

மேனாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்து வடமொழியை எழுத்தெண்ணிப் படிக்க இடமுங் காலமும் பெற்ற ஆங்கில ஐரோப்பியப் புலவர்கள் தமிழ் தெலுங்கு முதலிய நாட்டு மொழிகளைக் கல்லாத அறியாமையினால் திராவிடர்கள் பேய்வழிபாடுடையவர்கள் என்று குழறுபடையாக மொழிந்து போயினர். ஒரு நாட்டு மக்களிடைப் பேய்களின் நினைவும் வழிபாடும் இருந்திருப்பின் அதற்கான அறிகுறிகளை அவர் தம் மொழியிற் காணல் வேண்டுமன்றோ? வடமொழி யகராதியில் நூற்றுக்கணக்கான பேய்களின் பெயர்கள் காணப்படுகின்றன; ஆனால் திராவிட அகராதியிலோ அத்தகைய பெயர்களைக் காண்பதற்கில்லை. திராவிடர்கள் இற்றைநாளிற் பேய்த்தெய்வங்களை வணங்கக் காண்கின்றோமே எனின் அவர்கள் வணங்கும் பேய்த் தெய்வங்கள் எல்லாம் ஆரியர்தம் பேய்த் தெய்வங்களே; ஆரியப் பெயருடையவை

களே. இவ்வுண்மை உணர்ந்தறிய மாட்டாது ஆங்கில ஐரோப்பிய மாணவர்கள் திராவிடர்கள் பேய் வழிபாட்டினர் என்று உளறி வழிந்தனர் !

இறைமைக் குணங்கள் இல்லாத தெய்வங்களைத் தெய்வங்களாகக் கொண்டு வழிபடுதல் திராவிடர்மாட்டு என்றுங் கிடையாது. அன்றியும் இறைமைக் குணங்கள் நிறைந்த பொருட்டெய்வங்களையுங்கூட, பண்டை இலக்கண நூலில் உயர்திணையின்பாற் படுத்தாமல் மக்களின் விருப்பத்திற்கியைந்தவாறு உயர்திணைப் படுத்தியோ அஃறிணைப் படுத்தியோ மொழிவதற்கான விதி வகுத்திருப்பதும் நோக்கற்பாலது. மகன் ஒருவனே முட்டின்றி உயர்திணையின்பாற்படுத்து மொழிவதற்குரியவனாகக் கருதப்பட்டான்; அஃதும் ஆறறிவு படைத்த மகன் ஒருவனே என்பது குறிக்கொளற்பாற்று. இஃதே திராவிடர் தம் உயர்ந்த தத்துவநிலை. உருவ வழிபாடன்று உண்மை வழிபாடே திராவிட நாகரிகத்திற்குரியதாம்

இனி, சாதி என்ற பிரிவினை திராவிடர்களுக்குள் கிடையாது. பிறப்பினால் உயர்வு தாழ்வை நேராகக் குறிக்கக் கூடிய எச்சொல்லும் திராவிட மொழிகளில் இல்லை. செய்தொழிலினாலும் பிறந்த நாடுகளினாலும் உண்டான பிரிவினையே அவர்கண்மாட்டுக் காணப்பட்டது. பின்னர்ப்புகுந்த ஒற்றுமை நலங்கெடுக்கும் ஆரிய சாதிப்பெயர்களுடன் இன்றும் திராவிடர்கள் தம்முடைய தொழிற்கும் பிறப்பிடத்திற்கு முரிய பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கக் காணலாம். பிறநாட்டு மக்கள் தம்மிடை வாழ்ந்து வருதற்குத் திராவிடர்கள் எத்தகைய இடர்ப்பாடும் விளைத்ததில்லை. எந்நாட்டினராயினும் திராவிடர்களிடையே தந்நாடே போல அவர்கள் வாழ்ந்துவர வசதி பெற்றனர். அதனால் நாளாவட்டத்தில் பிற நாட்டினரும் திராவிடர் தம் உயரிய நாகரிகத்தினால் ஈர்க்கப்பட்டு எத்தகைய வேறுபாடுமின்றி கலப்புற்றுத் திராவிடர்களே யாயினர். போரில் வென்று நாட்டைப் பிடித்தவர்கள் கூட திராவிடர் நாகரிக நிலையைச் சிதைக்க முடியாமல் அதன்மாட்டு ஈடுபடுவாராயினர். ஆந்திர நாட்டை அடிப்படுத்துப் பின் தமிழர் நாட்டிடையும் சிற்சில பகுதிகளைக் கைக்கொண்ட பல்லவர்கள் தம் இனச்சுவடேயில்லாமல் திராவிடர்களுடன் கலந்து பட்டமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

திராவிடர்தம் மணமுறையை நோக்கிலோ, அத்துறை நிகழ்த்தும் ஒவ்வொரு செயலுக்கும் ஆடவன் பொறுப்பாளியாக இருந்திருப்பது நன்கு புலப்படும். ஓராடவன் ஒரு பெண்ணுடன், பெற்றோருடன்பட்டோ படாமலோ பான்மை வழிப்பட்டுக் கூடிட நேரின் அவனுடைய உரிமைகளனைத்தும் அன்று

முதல் அப்பெண்ணைச் சார்வதே திராவிட முறை. சீரிய இவ் வற முறையுடன் ஆரியர்தங் காமமிக்க காந்தர்வ முறை போன்ற மண முறையை ஒப்பிட்டுப் பார்ப்போர்க்கு நம்பி வந்தபெண்ணை நட்டாற்றில் விட்டு எத்தகைய பொறுப்புமின்றி ஆடவன் தப்பித் திரிய இடங்கொடுக்கும் அவர் முறையின் குறைபாடு கூறாமலே விளங்கும். அத்தகையதோர் இழிமுறையில் நீதியும்நல்லொழுக்க மும் காணக் கிடக்கும் என்று கருதவுங் கூடுமோ ?

மனுநீதியில் "வர்ண சங்கிரகம்" என்றதலைப்பின் கீழ் "சாதி" யும் அதன் பல்வேறு பிரிவுகளுங் காணப்படுகின்றன. ஆரிய நாக ரிகத்திற்குப் பட்டோலையாயிருப்பது மனு நீதியே. பஞ்சமர்கள் என்று அழைக்கப் படுவோர் அந்நூலின்கண் "சண்டாளர்" எனக் கூறப் படுகின்றனர். "சண்டாளர்" என்பார் பார்ப்பனப் பெண் டிர்க்கும் "சூத்திர" ஆடவர்களுக்கும் முறைதவறிப் பிறந்தவர்கள் என்று அந்நூலே கூறுகிறது. இவ்விழி முறை இப்பொழு தில்லை யென்று துணிந்து கூறலாம். இத்தகைய "சண்டாளர்" களின் தொகை பார்ப்பனர் தம் மக்கட்டொகையைப்போல் ஆறு அல் லதுஏழு மடங்கு மிகுத்துக்காணப்படு கிறதென்ற உண்மையை நோக்கின்மனு நீதியின் கூற்று ஒப்பத்தக்கதோ எனஐயுறவேண்டி யிருக்கிறது. ஐயுறாமல் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டு மெனக் கூறின் ஆரியர்தங் கற்பொழுக்கம் நிலைகுலைந்து காணப்படுவது கரு தற்பாற்றும். ஆரியர்தம் நூற்களும் நாடகங்களும் இழிந்த காமச் சுவைமிகுந்த கதைகள் நிறைந்தவை என்று முன்னர்க்கூறினோம். அத்தகைய கதைகளும் நாடகங்களும் மணியெனத் திகழ்ந்த திரா விடர் நாகரிக முறையை ஒருவாறு மாசுபடுத்தின என்பதையொப் புக் கொள்ளல் வேண்டும். வெறுத்தொதுக்கற் குரிய இக்கதைகள் எல்லாம் எவ்வாறோ திராவிட மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுவிட்டன. சங்கத்தமிழிலோ அதற்கு முன்னெழுந்த தமிழ்நூல்களிலோ வெறுக்கத் தகுந்த காமமலிந்த கதைகள் ஒன்றேனும் காணக்கிடையாது. சிலப்பதிகாரத்தில் ஒரே ஒரு கதைகுறிக்கப் பட்டுள்ளது உண்மையே; ஆனால் அஃது ஒரு பார்ப்பினி கற்பிழந்து காசிக்குச் சென்று கழுவாயாற்றியதையே குறிப்பதாம். இதனால் ஆரிய நாகரிகத் தாக்கால் திராவிடர்கள் எவ்வாறு தம் ஒற்றுமை நலமிழந்து, உயரொழுக்கங்கள் குன்றி, சாரத்தைக் கைநெகிழ விட்டுச் சக்கையையே விடாப்பிடியாப் பற்ற நேர்ந்ததென்பது ஒருவாறு புலனாம்.

(தொடரும்)

—

ஔவையார்

(முகப்புப் படம் பார்க்க)

நல்லிசைப் புலமை மெல்லியலாருண் மேம்பட்டவர்; தெய்வ பக்தியும் அற்புத மகிமையுமுடையவர்; இவர் பிதா பகவனென்னும் வேதியன்; தாய் ஆதியென்பாள். பாணர் சேரியில் வளர்ந்து வயதடைந்தவர். பிறந்த பொழுதே தாய் தந்தையர் நியமனப்படியே சிசுவைப் பிரியமாட்டாது வருந்துகையில் "எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ வில்லையோ, அவ்வுயிருள் யானுமொன்றிங் கல்லலேனே, வவ்வி அருகுவது கொண்டிங் கலைவானே னன்னாய், வருகுவது தானே வரும்." எனக்கூறி அவரைத் தேற்றி விடுத்தவர். இவருடன் பிறந்தவர் அதிகமான், திருவள்ளுவர், கபிலரென மூன்று சகோதரரும், உப்பை, உறுவை, வள்ளியென மூன்று சகோதரிகளுமாவார். இவர் தமிழ்நாடு முழுவதுஞ் சஞ்சரித்துப் பற்பல அமையங்களிற் பற்பல தனிக்கவிகளால் பற்பல அற்புதங்கள் செய்தவர்.

இவராற் பாடப்பட்டோர் அதியமான் நெடுமானஞ்சி, அதியமான் மகன் பொகுட்டெழினி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலியோ ரநேகர். அதியமான் நெடுமானஞ்சி தனக்குக் கிடைத்த கருநெல்லிக்கனியை உண்டோர் நெடுங்காலஞ் சீவித்திருப்பரென்ப துணர்ந்தும் தானதனை யுட்கொள்ளாது இவரிடத்துள்ள அன்பினால் கொடுக்க வுண்டு நெடுங்காலஞ் சீவித்திருந்தவர். இதனைப் புறநானூற்றில் இவர் பாடலிலும், நெடுநல்வாடையிலும் காணலாம். அதிகமான் நெடுமானஞ்சி யிடத்துள்ள அன்பினால் தொண்டைமானிடந் தூது சென்றவர். இவர் உக்கிரப்பெருவழுதி காலமுதல் கம்பர் காலம் வரையில் அநேக நூற்றாண்டுகள் சீவித்தவரென்றறியப்படுகிறது.

இவரியற்றிய நூல்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை, பந்தனந்தாதி, ஞானக்குறள் முதலியன. அன்றியும் எட்டுத் தொகையுள் சிலவற்றில் பலசில பாடல்களும், அவ்வவ்வமயங்களிற் கூறிய எண்ணிறந்த தனிச் செய்யுட்களும் இவர் பெயரானே விளங்கும். இவர் வாக்கு விசேடத்தானே தொண்டைநாட்டில் சுரக்குங் கிணறு இன்றளவும் அங்ஙனமே யுள்ளது.

(அபிதான கோசம்)

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

1888-ஆம் ஆண்டு ஜூன் முதல் நாளில் இந்தியக் கிறித்தவ உடையார் வகுப்பிற் பிறந்து, திரிசிரபுரம் ஸெயின்ட் ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்று, பின்னர் இலண்டன் சென்று கிரேஸ் இன் நிலையத்தில் பார் அட் லா பட்டம் பெற்று, நாடு திரும்பி, 1918 முதல் 1920 வரை தஞ்சை நகராண்மைக் கழகத் தலைவரா யிருந்தவரும், 1924 முதல் 1930 வரை தஞ்சை ஜில்லாபோர்ட் தலைவரா யிருந்தவரும், இலண்டன் வட்டமேஜை மாநாட்டு அங்கத்தினரில் ஒருவரா யிருந்தவருமான இராவ்பகதூர் A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள் சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமை யறிந்து யாம் கழிபேருவகை கொள்கிறோம். தமிழில் மிகுந்த பற்றுடையவரும் தமிழ்க் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வமுடையவரும் தமிழர் முன்னேற்றமே குறிக்கோளாகக் கொண்டவருமான இப்பேரறிவாளர் நாட்டுக்கு நற்றொண்டு புரிந்து மேன்மேலும் உயர்பதவியடைந்து திகழுமாறு இறைவன் அருள்புரிவானாக.



* * *

ஆஸ்திரியா நாட்டுத் தலைமையாளரான டாக்டர் டெல்ஃபஸ் என்பவர் அரசாங்க எதிர்க்கட்சியாரால் சுட்டுக்கொல்லப்பட்டதும், ஜெர்மனி நாட்டுக் குடியரசுத் தலைவரான ஜெனரல் வான் ஹிண்டன்பர்ஃக் என்பவர் மரணமடைந்ததும் வருந்தற்பாலனவாம்.

* * *

கதிரி (Radium) என்ற புதியதோர் கனிப்பொருளைத் தம் ஆராய்ச்சி வன்மையாற் கண்டுபிடித்து அறிவியலுலகிற்குப் பேருதவி புரிந்த பிரான்ஸ் நாட்டுப் பேரறிஞர் மேஅடேம் மரியா க்யூரி என்ற அம்மையார் தம் 67-வது வயதில் விண்ணுலகு நீத்தது பெரிதும் இரங்கற்பாற்றும்.

* * *

சென்னைப் பல்கலைக் கழகத்தார் விரைவில் தமிழில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்புத் துவக்கவேண்டுமென்று முடிவுகட்டியுள்ளது நற்செய்தியாகும். இத்துணைக் காலங் கழித்தேனும் இத்தகைய ஓர் எண்ணம் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினர் மனத்திடை முளைத்தது போற்றற்குரியதே.